Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 30 (25.12.2003) வியாழக்கிழமை இதழ்:86

புதிய ராசி சில்க்ஸ்

70, 71 A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

கல்யாணப்பட்டுப் புடவைகளின் கைராசி நிறுவனம்

☆ திருமணப் பட்டுச் சாறிவகைகள்
☆ சோளி கிற்
☆ சேட்டிங்
☆ ஸ்கேட் & பிளவுஸ்
☆ கவுண்
☆ சல்வார் கிற்
☆ இந்தியன் சாறி வகைகள்
☆ பேபி சூட்
☆ சிறுவர் சிறுமியருக்கேற்ற றெடிமேட் ஆடைகள்

மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்

# புலிகள் ஒருபோதும் இந்தியக் கடற்பரப்பில் தமிழக மீனவரைக் கைதுசெய்யவில்லை!

## கதிர்காமரின் கூற்றுக்கு இந்தியக் கடற்படைத் தளபதி பதில்



உதயநாராயண சிற்னாவிஸ்

(சென்னை)

**விடுதலைப் புலிகள் ஒருபோதும் இந்தியக் கடற்பரப்பிற்குள் வந்து தமிழக மீனவர்கள் எவரையும் கைது செய்யவில்லை. தமது பிரதேசத்துக்குள் சென்ற இந்திய மீனவர்களையே கைது செய்தனர் என்று இந்தியாவின் கிழக்குக் கடலோரக் காவற் படைத் தளபதி கொமடோர் உதயநாராயண சிற்னாவிஸ் தெரிவித்தார்.**

சென்னை, மீனம்பாக்கத்தில் உள்ள கடலோரக் காவற்படையின் விமான நிலையத்தில் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்தவாரம் சென்னைக்கு விஜயம் செய்திருந்த இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் - தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்றிருந்ததாகத் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த வாரம் சில இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் இந்தியக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

வாசகநேயர்கள் விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் முகவர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கு எமது கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.



## முகமாலை சோதனைச் சாவடி 5.30 மணியுடன் மூடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

முகமாலை இராணுவச்சோதனைச் சாவடி நேற்று 5.30 மணியுடன் மூடப்பட்டமையால் கிறிஸ்மஸ் பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கென ஏ-9 வீதியூடாகப் பயணித்த மக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

இது குறித்துத் தெரியவருவதாவது,

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு நேற்றிரவு பொதுமக்களின் வசதிகருதி தமிழீழ விடுதலைப் புலிகள் ஏ-9 பாதையூடான போக்குவரத்து நேரத்தை அதிகரித்திருந்தனர். ஓமந்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிகாரிகளுடன் யாழ். தளபதி சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

## தனது அதிகார எல்லையைக் காட்டவே அமைச்சுக்களை ஜனாதிபதி பறித்தார்!

### காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார்

(கொழும்பு)

தனது அதிகாரத்தின் ஆதிக்க எல்லையைக் காட்டவே, அமைச்சுப் பதவிகளைத் தன்னுடன் இணைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டு வருகின்றாரென காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

உள்துறை அமைச்சின் கீழுள்ள சில திணைக்களங்களை ஜனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தமை தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பு நிலையைக் கருத்திற் கொண்டு சில அமைச்சுப் பதிவிகளைப் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவித்திருப்பது உண்மையல்ல. அவர் தனது அதிகாரத்தினையும், தனது ஆதிக்கத்தையும் வெளிப்படுத்தவே அப்படிச் செய்துள்ளார்.

ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளபோதிலும் ஜனாதிபதி அதற்கு உடன்பாடு இல்லா

## தமிழீழ சுகாதார சேவையினரின் வழிகாட்டலில்

## எயிட்ஸ் தடுப்பு பிரசார நடவடிக்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிகாரிகளுடன் யாழ். தளபதி சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நேற்று அரச அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடினார்.

காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அரச அதிபர் உட்பட திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு நெருககடிகள் குறித்து இராணுவத் தளபதியிடம் அரச அதிகாரிகள் பிரஸ்தாபித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி 23 ஆம் திகதி இணையும்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் கூட்டுச்சேர்வதற்கான ஒப்பந்தம் அடுத்த மாதம் 23 ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைவதற்கான முயற்சிகள் மிக நீண்ட நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் அண்மைக் காலங்களில் இரு கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்ட உடன்பாடு காரணமாக இந்தக் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

### தமிழீழ சுகாதார சேவையினரின் வழிகாட்டலில்

# எயிட்ஸ் தடுப்பு பிரசார நடவடிக்கை குடாநாடு தழுவிய ரீதியில் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

குடாநாடு தழுவிய ரீதியில் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழீழ சுகாதார சேவையினரின் வழிகாட்டலில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலரும் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான 'எயிட்ஸ்' விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள், ஓட்டோக்கள் என்பவற்றில் விழிப்புணர்வு பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மக்கள் கூடும் இடங்களிலும் பொது இடங்களிலும் பதாதைகள் கட்டப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்களின் வாயில்கள் அனைத்திலும் "கொடிய நோயில் இருந்து எமது சந்ததியைக் காப்போம்" எனும் வாசகம் அடங்கிய பதாதைகள் கட்டப்பட்டுள்ளன. அத்தோடு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் பாரிய விளம்பரப் பலகைகள் பதின்மூன்றை முக்கிய இடங்களில் நாட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி பிரதேசத்திற்கான எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளுக்கு - அரசியற்துறையைச் சேர்ந்த கண்ணதாசனும் வடமராட்சி பிரதேசத்திற்கான பிரசார நடவடிக்கைகளுக்கு - அரசியற்துறையைச் சேர்ந்த மதன்ராஜ்ஜும், வலிகாமப் பிரதேசத்திற்கான பிரசார நடவடிக்கைகளுக்கு - தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினியும், நல்லூர் பிரதேசத்திற்கான பிரசார நடவடிக்கைகளுக்கு- தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

திருப்பது உண்மையல்ல. அவர் தனது அதிகாரத்தினையும், தனது ஆதிக்கத்தையும் வெளிப்படுத்தவே அப்படிச் செய்துள்ளார்.

ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளபோதிலும், ஜனாதிபதி அதற்கு உடன்பாடு இல்லாதவராகக் காணப்படுகிறார். இதுவே இன்றைய அரசியல் இழுபறி நிலைக்குக் காரணம்.

உள்துறை, பாதுகாப்பு, ஊடகத்துறை முதலான அமைச்சுக்களை ஜனாதிபதி தனது கையில் வைத்திருப்பதனால் சமாதான நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தனது வீண்பிடிவாதங்களையும், தேவையற்ற வைராக்கியத்தையும் விடுத்து மக்களுக்காகச் செயற்படும் பொருட்டு நீதியுடன் நடந்துகொள்ளவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.



நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது, அரச அதிபர் பத்மநாதனுடன் யாழ்.படைத் தளபதி சுசில் சந்திரபால கலந்துரையாடுகிறார்.

"கணனித் தகவல் தொழினுட்பத்தினூடு 2004ஐ நோக்கி"

காலம்: 27/12/2003 - 29/12/2003 (9.00 AM to 4.00 PM)

மாபெரும் இலவச கணனிக் கருத்தரங்கு

பதிவுகளுக்கு:
STP Computer World (pvt) Ltd.
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P: 2222674

* பாடசாலை மாணவர்கள் (O/L & A/L) * அரச உத்தியோகத்தர்கள். * பெற்றோர்கள் ஆகியோருக்கு

# இலவச கணினிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் நவீன உத்திகளைப் புகுத்தி மக்கள் பயன்பெறும் முகமாக '2004 ஐ நோக்கி' எனும் தொனிப்பொருளில் எஸ்.ரி.பி கணினி நிறுவனம் நடத்தும் இலவச கணினிக் கருத்தரங்கு 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள விரும்புவோர் நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

# மீட்பர் வாழும் மண்ணிது




மழை பொழிகின்ற காலத்தில் பிறந்தார்
எங்கள் மீட்பர்
என்ன அப்படிப் பார்க்கின்றீர்கள்
வருடம் வழமைக்கு மாறாகத்தான் இம்முறை
வருகிறது.
நேற்றுவரை வரலாறு நாம் அடிமைகளாம்.
பாவத்தில் தள்ளப்பட்ட இனமாம் நம்மினம்.
நேற்றுத்தான் அப்படி - இன்று
அப்படியல்ல.
சிலுவைப்பாடுகள் மறையப்போகும் கால
மல்லவா இது
மீட்பர் வாழும் ஈழமல்லவா!
காத்திருத்தலில் பலன் கிடைத்தது
தவறுகளை மீட்பர் மன்னித்துவிட்டார்
எந்த வேறுபாடும் நமக்குள் வேண்டாம்
ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் மீட்பர் வழி
யில் போராடுவோம்.
போராடிப் பெறும் விடுதலைக்குத்தான் பெறுமதி அதிகம் - அந்த
விடுதலை வாழ்வில் மட்டுந்தான் நிறைவும் மகிழ்வும் உண்டு.
நல்ல மனிதத்தில் புனிதம் நிறைவாக நிரந்தரமாகவுள்ளது.
விடுதலையை மீட்டுத்தருவார் வாருங்கள்
மீண்டும் பாலன் சமாதானத்தோடு வருகிறார் - அவரை
சிலுவையிலிருந்து காப்பது எல்லோரினதும் கடமை.
நீங்கள் பொறுத்ததோடு இன்னும் கொஞ்சம் பொறுங்கள்
பொங்கி எழுகின்ற காலத்தை காலமே தள்ளிவிடும் - அதுவரை
நீங்கள் அமைதியாகுங்கள்.
விடுதலையைப் பெற்றுக்கொண்டு உங்களைக் காண
மீட்பர் வருவார்.
நல்லவருக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் எங்களின் மீட்பர்
நல்ல செய்தியோடு வீடுவீடாக வந்து உங்கள் குறை தீர்ப்பார்.
மீட்பர் வரும் வழி பார்த்து நம்பிக்கையுடன் காத்திருங்கள்
நிச்சயம் வருவார் தெய்வ வடிவில் - அல்ல
மனித வடிவில்.

யோ. யூட்நிமலன்



அனைவருக்கும் எமது நத்தார் - புதுவருட
நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**

நடத்தும்



**ஒளிவிழா**

28.12.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி
மறைக்கல்வி நடுநிலைய மண்டபம்

**நிகழ்ச்சிகள்**
நாடகம், நடனங்கள், இசை நிகழ்ச்சி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-1949)

# சின்னஞ்சிறு செய்திகள்

## சிற்றூர்திகள் ஒன்றையொன்று முந்திச் செல்லத் தடை

(யாழ்ப்பாணம்)

சிற்றூர்திகள் போட்டியின் அடிப்படையில் அதிவேகமாகச் சென்று ஒன்றையொன்று முந்துகின்ற செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக, யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமான முறையீடுகள் இருப்பின், பொதுமக்கள் தம்மிடம் தெரியப்படுத்துமாறும், மேற்படி சங்கத்தின் தலைவர் பொ.கெங்காதரன் கேட்டுள்ளார்.

## மாணவரின் நிகழ்ச்சிகள் யாழ்.சேவையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்களால் தயாரிக்கப்பட்ட இரு நிகழ்ச்சிகள் யாழ்.சேவையில் ஒலிபரப்பப்படவுள்ளன.

இன்று இரவு 10 மணி முதல் 10.30 மணிவரை 'கருவறைக்கதறல்கள்' என்னும் நிகழ்வும், நாளை 8.30 மணிமுதல் 9 மணிவரை 'கிறிஸ்து பிறப்பு' இசையும் கதையும நிகழ்வும் ஒலிபரப்பப்படவுள்ளது.

## வவுனியா வளாகம் இயங்கிய மண்டபத்தை பாவிப்பதற்கு தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம் இயங்கிவந்த வவுனியா காமினி மகா வித்தியாலயத்தின் மண்டபத்தை தொடர்ந்தும் பாவிப்பதற்கு வித்தியாலயத்தின் அதிபர் தடைவிதித்திருப்பதுடன், அது தொடர்பாக வவுனியா பொலிஸாரிடமும் முறைப்பாடொன்றைச் செய்துள்ளார்.

மேற்படி மண்டபத்தின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருப்பதாகவும், மின்சாரம் தடைப்பட்டிருப்பதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து பாவிப்பதற்கு இந்த மண்டபம் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும், ஒப்பந்த காலம் இன்னமும் முடிவடையாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு - குறிகட்டுவான் படகுச்சேவை அடுத்த மாதம் முதல் நேரமாற்றம்!

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான பயணிகள் படகுச் சேவை, ஜனவரி முதலாம் திகதி முதல் நேர மாற்றம் செய்வதற்கான தீர்மானம் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன் பிரகாரம் - நெடுந்தீவில் இருந்து பயணிகள் படகு - காலை 7.30 மணிக்கும், மாலை 2.30 மணிக்கும், குறிகட்டுவானில் இருந்து காலை 10 மணிக்கும், மாலை 4.30 மணிக்கும் புறப்படவுள்ளது.

நெடுந்தீவுக்கும் - குறிகட்டுவானுக்கும் இடையில் பயணிகள் படகு சேவையில் ஈடுபடும் தனியார், நெடுந்தீவு ப.நோ.கூ சங்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றின் சகல படகுகளுக்கும் இம்மாற்றம் உரியதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நேரமாற்றம் காரணமாக, காலையில் சென்று பல தேவைகளை யாழ்.நகரில் முடித்துக்கொண்டு அன்றையதினமே நெடுந்தீவு திரும்புவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (113)

# நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையில் கால்நடைகளின் எச்சங்கள்!

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறைப் பகுதி கட்டாக்காலி கால்நடைகளின் எச்சங்களால், கடந்த சில நாட்களாக அசுத்தப்படுத்தப்பட்டு வருகின்றது.

இறங்குதுறையை அண்டிய பகுதியில் உள்ளவர்களது வளர்ப்பு கால்நடைகளால்தான் இந்த நிலை ஏற்படுகின்றது. இரவில் சன நடமாட்டம் அற்றவேளையில் - இந்தக் கால்நடைகள் பயணிகள் தங்குமிடம் மற்றும் தனிநாயக அடிகளார் சிலை அமைந்த இடம் போன்றவற்றில் படுத்து உறங்குவதுதான் இதற்கான காரணமாகும்.

இதனை கால்நடை வளர்ப்போர் கண்டும் காணாதிருப்பதுடன், துறை முகப்பகுதி சுத்திகரிப்பில் ஈடுபடும் நெடுந்தீவு பிரதேசசபையினரும் இதனைக் கவனத்தில் எடுப்பதாக இல்லை. இதனால், மாவிலித் துறை முகப்பகுதி - கால்நடைகளின் வளர்ப்பிடம் போன்று காட்சிதருவது குறிப்பிடத்தக்கது. (113)

# மன்னார் மடுக்கரைப் பிரதேசத்தில் 50 மில்லியன் செலவில் மாதிரிக் கிராமம்

மன்னார் மடுக்கரைப் பிரதேசத்தில், 50 மில்லியன் ரூபா செலவில் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரிக் கிராமத்தினை மன்னார் றோவா அகதிகள் பராமரிப்பு நிலையம் அமைத்து - மக்களை மீளக்குடியமர்த்தியுள்ளது.

இந்தக் கிராமத்தில் காணிகள் வீடுகள், பாடசாலைகள், வைத்திய சாலைகள், சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள் என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரிக் கிராமம் அமைப்பதற்கு முன்பு இந்தப் பிரதேசம் அடர்ந்த காட்டுப் பிரதேசமாகவும், இடையிடையே குளங்களும், குட்டைகளும் காணப்பட்டன.

காடுகளை அழித்து நீர்நிலைகளைச் சுத்தம் செய்து, வீதிகளை அமைத்து - தற்போது இந்தப் பிரதேசம் சிறந்த வீடமைப்புத் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், ஏறக்குறைய 200 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இந்த செயற்பாடுகளை றோவா நிறுவன மேலாளர் மேற்கொண்டார். (201)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலிச் சிவன்கோவில் வீதியிலுள்ள (நர்சிங்ஹோம் அண்மையில்) 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- வே.எதிர்மனசிங்கம் 49, 2 ம் ஒழுங்கை பிறவுண் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணம்.(565)

**விற்பனைக்கு**

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களும், பான்சி பொருட்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். Telesonic, Rikon, Pacific, Usha, sunda வகையில் Fans, Gas cooker, Blenders, Clock, Rice cooker, Food jars, Ceiling Fans, Thermos China flask இன்னும் பல தரப்பட்ட உபகரணங்களும் உண்டு.

RAJU STORES
67,69, Kasturiar Road, Jaffna.
T.P:- 222 5224 Fax:- 222 5224
(சி-1938)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

எம்.ஜி.ஆர் நினைவு தினத்தையொட்டி இன்றுமுதல் எம்.ஜி.ஆர்(இருவேடம்), ஜெயலலிதா நடித்த

**குடியிருந்த கோயில்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

JOHNNY ENGLISH (சி-1846)

**ராஜா** யாழ்ப்பாணம்.

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த

**எனக்கு 20 உனக்கு 18**

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1847)

# பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்ட வருவாய்ப்பகுதி ஆளுகையில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களை 2003.12.27 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்விற்கு வருகைதரும்போது கொண்டுவருமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலை:**

01. வரி அறவீட்டாளர்

**தகைமைகள்:**

01. தமிழ, கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை.

**நேர்முகத்தேர்வு நடைபெறும்,**

நாள்: 2003.12.27
நேரம்: காலை 09.00 மணி.
இடம்: வருவாய்ப்பகுதிச் செயலகம்,
யாழ்சாலை, பளை.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

*ஆளுகை,*
*மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,*
*வருவாய்ப்பகுதி.*

# திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்க இடமாற்ற அறிவித்தல்

இல.249, பலாலி வீதியில் இயங்கிவந்த திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கம் இன்றுமுதல் கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இந்து மகாவித்தியாலய முன்வீதியில் (பாடசாலை வீதியில்) இயங்குகின்றது என்பதை சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். (567)

# பிறந்தநாள் வாழ்த்து



திரு.திருமதி வினிபிரட் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜொய்சன தனது, நான்காவது பிறந்தநாளை இன்று கனடாவில் கொண்டாடுகின்றார். இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் குழந்தை யேசுவின் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மப்பா, தொட்டம்மா,
தொட்டப்பா, அண்ணா.
(சி-1939)

## பழைய அரசியல் கொள்கைகளைக் கைவிட்டு

# இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா காத்திரமானபங்கு வகிக்கவேண்டும்

## அவுஸ்திரேலிய தமிழ் அமைப்புக்கள் கோரிக்கை

இந்தியா - தனது பழைய அரசியல் கொள்கைகளைக் கைவிட்டு, இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சியில் காத்திரமான பங்கினை வகிக்கவேண்டும்.

இவ்வாறு, அவுஸ்திரேலியாவில் வாழும் பதினொரு தமிழ் அமைப்புக்கள் சேர்ந்து - பிரதமர் வாஜ்பாய்க்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதர்மூலம் அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்தியா தனது பழைய அரசியல் கொள்கைளைக் கைவிடவேண்டும். இவ்வாறு, பழைய அரசியல் கொள்கைகளை இந்தியா கொண்டிருந்தமையே, இந்தியப்படைகளில் 1000 பேரையும், எண்ணாயிரம் இலங்கைத் தமிழ் மக்களையும் இழக்கக் காரணமாயிற்று.

தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள போர்நிறுத்தத்தை நிரந்தரமாக்கி, சமாதானப்பேச்சை நிரந்தரமாக முன்னோக்கி நகர்த்த வேண்டியுள்ளது. எனவே, இதில் இந்தியாவின் பங்களிப்பினை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

தற்போதைய 21 ஆம் நூற்றாண்டில் - தெற்காசியப் பிராந்தியத்தில், இந்தியா ஒரு பிராந்திய வல்லரசாகும். இதற்கு இந்தியாவின் பொருளாதாரம், கல்வி, படைபலம் ஆகியவையே காரணமாகும். இந்தியா சொன்னால்- கொழும்பு கேட்கக்கூடிய நிலையிலேயே இன்றுள்ளது.

வரலாற்றுரீதியாக இலங்கைத் தமிழர்கள் - இந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டுடன் - கலாசாரம், இனப் பண்பாடு போன்றவற்றில் பின்னிப் பிணைந்துள்ளனர்.

இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்குவந்த சிங்கள அரசுகளினால், தமிழ்மக்கள் அடக்கப்பட்டதனாலேயே அவர்கள் ஆயுதமேந்திப் போராடவேண்டி வந்தது. அத்துடன் அரசியல் தீர்வின்மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப் படவேண்டுமென்பதை விடுதலைப் புலிகளும் ஏற்றுள்ளார்கள்.

எனவே, இந்தியா - இந்தப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகளுடன் நேரடியான பேச்சுக்களில் ஈடுபடவேண்டுமென அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# படையினருக்கு வழங்கிய பஸ் சேவையை இடைநிறுத்த போக்குவரத்துசபை தீர்மானம்

(கொழும்பு)

மத்திய போக்குவரத்துச்சபை - படையினருக்கு வழங்கிவந்த போக்குவரத்துச் சேவையை, விலக்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளது.

இதுவரைகாலமும் மத்திய போக்குவரத்துச்சபை - இராணுவம், பொலிஸ், கடற்படை, வான்படை ஆகியவற்றுக்கு வழங்கிவந்த போக்குவரத்துச்சேவையை விலக்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளது.

தமது போக்குவரத்துச்சபைக்கு, முப்படைகளும் 90 மில்லியன் ரூபாவைச் செலுத்தவேண்டியுள்ளது. இதனால் - 90 மில்லியன் மேலதிக நிதியைச் செலுத்திய பின்னரே, படையினருக்குப் போக்குவரத்து அனுமதி வழங்கமுடியுமென, மத்திய போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

இராணுவம் - மத்தியபோக்குவரத்துச் சபைக்கு 60 மில்லியன் ரூபாவும், கடற்படையினர் 15 மில்லியன் ரூபாவும், வான்படையினர் 7 மில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டியுள்ளது.

இதேவேளை அஞ்சல் திணைக்களத்திற்கு - மத்திய போக்குவரத்துச்சபை பல மில்லியன் ரூபாவினைச் செலுத்தவேண்டியுள்ளது.

இந்தத்தொகையினை மத்திய பேருந்துசபை செலுத்தாது விட்டால், எதிர்காலத்தில் அஞ்சல் பொதிகளை விநியோகம் செய்ய முடியாதநிலை ஏற்படும் என, மத்தியசபை அறிவித்துள்ளது. (01)

## மட்டக்களப்பு புல்லுமலையில்

# புலிகளின் பதுங்குகுழி விவகாரம் விசாரணைகள் தாமதமடையுமாம்

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு புல்லுமலைப் பிரதேசத்தில் - விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பதுங்குழிகள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதில், சில தினங்கள் தாமதமடையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இது தொடர்பாக அறிவித்துள்ளதாக, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் -பிரகடோட்ரயர் தெரிவித்தார்.

இதுபற்றிய விசாரணைகளுக்காக நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் - சம்பந்தப் பட்ட அந்தப் பிரதேசங்களுக்குச் சென்றடையவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்தப் பதுங்குகுழிகள் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலா அல்லது விடுவிக்கப்படாத பிரதேசத்திலா அமைந்துள்ளது என்பது பற்றிய விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதுங்கு குழிகள் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அந்தப் பிரதேசத்திற்குச் சென்ற கண்காணிப்புக் குழுவினர்- பதுங்குகுழிகள் இராணுவக் கட்டுப் பாட்டுப்பிரதேசத்தில் அமைந்திருந்தால், அதனை அகற்றுமாறு புலிகள் இயக்கத்திடம் கோரவிருந்ததாகவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் அதிகாரி ஹொக்லன்ட் தெரிவித்தார்.

## நீதிமன்ற நீதிவானுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

நீதிமன்ற நீதிவானுக்கு எதிராக, நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவர் உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமைமீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்தச் சம்பவம் - நேற்றுமுன்தினம் கடுவெலப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தர்மதாஸா என்ற சட்டத்தரணி, தமது தரப்பு சாட்சி ஒருவரை குறுக்கு விசாரணை செய்யும்போது, நீதிவான் ஜானகு ராஜரட்ண, தமக்கு எச்சரிக்கை விடுக்கும்வகையில் நடந்துகொண்டதாகக் குறிப்பிட்ட சட்டத்தரணி, உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் தமது அடிப்படை மனித உரிமைமீறல் பறிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக 20 இலட்சம் ரூபா நட்டஈடு தரப்படவேண்டும் எனவும் தனது மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 35 இந்திய மீனவர்கள் இராமேஸ்வரம் சென்றனர்

இலங்கைக் கடற்படையினரால் பிடித்துச்செல்லப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த - ராமேஸ்வரம், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 35 மீனவர்கள் விடுவிக்கப்பட்டு ராமேஸ்வரம் சென்றடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த இவர்கள் விடுவிக்கப்பட்டு, இந்தியக் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அனைவரும் ராமேஸ்வரம் சென்றடைந்தனர்.

# காலிமுகத்திடலை அரசாங்கம் குத்தகைக்கு வழங்கியுள்ளது!

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டுவரும் தனியார் மயமாக்கலின் விளைவாக, கொழும்பு காலிமுகத்திடலை அரசு- ஈ.ஏ.பி. எதிரிசிங்க நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது.

இந்தக் குத்தகையை, அரசாங்கத்திடமிருந்து இரண்டுவருட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில், 90 இலட்சம் ரூபாவிற்குப் பெற்றுக்கொண்டுள்ள இந்த நிறுவனம், காலிமுகத்திடலை ஒரு கேளிக்கைப் பொழுதுபோக்கு பூங்காவாக மாற்றி அமைக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் - ஏழை, பணக்காரர் வேற்றுமையின்றி, காற்று வாங்குவதற்காகவும் தமது குழந்தைகளுடன் நேரத்தைச் சந்தோசமாகக் களிப்பதற்காகவும் ஒன்றுசேரும் ஒரு இடமாகக் கருதப்படும் காலிமுகத்திடலுக்குச் செல்வதாயின், இனிமேல் பணம் செலுத்த வேண்டியநிலை தோன்றலாம் என்ற கருத்து பொதுமக்களிடையே காணப்படுகின்றது.

இந்தக் குத்தகை தொடர்பாக பல்வேறு தரப்பினர் மத்தியில் விமர்சனங்கள் தோன்றியுள்ளபோதும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு 12 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் வருமானமாகப்பெறும் என்று அரச தரப்பினர் நியாயப் படுத்தியுள்ளனர்.

அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கே.வி.தர்மசிறி - அரசாங்கம் மாதாந்தம் ஐந்து இலட்சம் ரூபாவை, பராமரிப்புச் செலவுகள் காரணமாக இழப்பதாகவும், இந்த நடவடிக்கை மூலம் அரசாங்கம் வருமானத்தை ஈட்டும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், எதிரிசிங்க நிறுவனம் உண்மையிலேயே என்ன செய்யப் போகிறது என்பது மர்மமாக இருப்பதனால், சுற்றாடல் அமைப்புக்கள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிடவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுகாதார தொண்டர் தம்மை நிரந்தரமாக்கக்கோரி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன் வழி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதனைப் படங்களில் காணலாம்.

# தமிழரை கொன்றுகுவிக்க அமைக்கப்பட்டதே அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இல்லம்

## விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு

தமிழரைக் கொன்றுகுவிப்பதற்கு அமைக்கப்பட்டதே - அத்துருகிரிய மிலேனியம் சிற்றி பாதுகாப்பு இல்லம் என,

கொழும்பு கொம்பனித்தெரு நிப்பொன் நட்சத்திர விடுதியில் நடைபெற்ற புதிய இடதுசாரி முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில், முன்னணியின் தேசிய அமைப்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில்- முன்னணியின் செயலாளர் லீனஸ் ஜெயதிலக, தொழிற்சங்கத் தலைவர் நீல் விஜேசிங்க, அந்தரங்க காரியதரிசி ஜெராட் கமகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சர்ச்சைக்குரிய இந்த இல்லம்- பாதுகாப்பு நோக்கத்துக்காக அமைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அவர், தமிழர்களையும் இளைஞர்களையும் கொன்றுகுவிப்பதற்காக, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தகாலத்தில் அமைக்கப்பட்ட சித்திரவதை முகாம் இதுவெனவும் தெரிவித்தார்.

இதற்கு ஆதரவாக இடதுசாரி வேசம்போடும் ஜே.வி.பியினர் கருத்து வெளியிட்டிருப்பதன்மூலம், அவர்கள் எந்த அளவுக்கு இனவாதக் கொள்கையை கடைப்பிடிக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முதலாளித்துவரீதியில் பார்த்தாலும், ஜனநாயகரீதியில் பார்த்தாலும் இதுபோன்ற வதைமுகாங்களை அமைப்பது மனிதாபிமானமற்ற சட்டவிரோதச் செயலாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## 'எயிட்ஸ்' விழிப்புணர்ச்சி வாரம் - டிசம்பர் 23 முதல் 28 வரை

## எமது வாசலைத் தட்டும் கொடிய 'எயிட்ஸ்' இல் இருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்

# உவர்நீர் தடுப்பணைகளை அமைக்க

# நாற்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் கீழ், யாழ். மாவட்டத்தில் உவர்நீர்த் தடுப்பணைகளை அமைப்பதற்கென 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ் செயலகத்தில் இயங்கும் வட-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்ட அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சில குளங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் - தீவுப்பகுதிகளிலுள்ள கடற்கரையோரங்களில் தடுப்பணைகள் அமைக்கப்படவுள்ளன.

உவர் நீர்த்தடுப்பணைகளை அமைப்பதனூடாக, தீவுப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவியாக இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்குரிய வேலைத் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதி- சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட வேலைகள்யாவும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தொடர்ந்து அடுத்த ஆண்டு தொடக்கம் முதல், புதிய வேலைத் திட்டங்கள் இடம்பெறும் எனவும் அவ்வட்டாரங்களில் தெரிவிக்கப் படுகின்றன. (ப)

# 10 வேங்கைகள் நினைவுநாள் உரும்பிராயில் அனுஷ்டிப்பு

(யாழ்பாணம்)

இந்திய இராணுவத்துடனான மோதலில் - வீரச்சாவடைந்த மேஜர் முரளி உட்பட, பத்து வேங்கைகளின் 16 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு - நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் உரம்பிராயில் அமைந்துள்ள நினைவுத் தூபியருகே இடம்பெற்றுள்ளது.

முன்னதாக பொதுச்சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் பொறுப்பாளர் - தமிழினி ஏற்றிவைத்தார். ஈகைச்சுடரினை மேஜர் முரளியின் பெற்றோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை, யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனை அடுத்து கோப்பாய்ப் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிரி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி, யாழ் மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குகேந்திரன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் ந.சிவகடாட்சம், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பிரமுகர்கள் உட்படப் பலர் உரையாற்றினார். (ப)

# காணாமற்போனோர் சங்கத்தினர் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர், எதிர்வரும் 31 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்.

ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்காக - கடந்த மாதமும், அதறகு முன்னரும் வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் அனுமதி கோரியிருந்தனர்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து அனுப்பிய கடிதத்தில், காணாமற்போனவர்கள் தொடர்பான முழு விபரத்துடனும், அவர்கள் கைது செய்யப்பட்ட திகதி, இடம், நேரம் முதலியவற்றுடனும், இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட அமைப்புகள் தொடர்பான விபரங்களுடனும் தொடர்புகொள்ளுமாறு கேட்டிருந்தார்.

அந்த விபரங்கள் யாவற்றையும் ஒன்றுதிரட்டியுள்ள நிலையில், இந்தச் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் அன்னையர் முன்னணியின் முக்கியஸ்தர்கள் முதலானோர் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்.

இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை இந்து கலாசார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. (ப)

# வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு தனியான பிரதேச செயலகம்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவை - பிரதேச செயலகமாக தரமுயர்த்துமாறும், வடமராட்சி கிழக்குக்கென தனியான பிரதேசசபையை உருவாக்கித் தருமாறும் - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரிடம் வடமராட்சி கிழக்கு புனரமைப்பு நிறுவனத்தினர் கோரிககை விடுத்துள்ளனர். அண்மையில் மருதங்கேணியில் நடைபெற்ற அரச அதிபர் கலந்துகொண்ட உயர்மட்ட கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பகுதி அபிவிருத்தி அடைய வேண்டுமெனில், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு - பிரதேச செயலகமாகவும், வடமராட்சி கிழக்குக்கென தனியான ஒரு பிரதேசசபை உருவாக்க வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாகும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. வடமராட்சி கிழக்குப்பகுதி, பரித் தித்துறைப் பிரதேச சபையின் கீழே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# குடாநாட்டுக்கு 2,000 மெற்றிக்தொன் சீனி ஓரிரு தினங்களில் எடுத்துவரப்படும்

## செயலகத்திட்டமிடல் அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஓரிரு தினங்களில் யாழ். மாவட்டத்திற்கென 2 ஆயிரம் மெற்றிக் தொன் சீனி எடுத்துவரப்படவுள்ளது என, யாழ்.செயலக புனர்வாழ்வுக் கிளையின் திட்டமிடல் அதிகாரி எஸ். சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

துரித நிவாரணம் வழங்கும் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டிற்குரிய நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான நிவாரணங்கள் துரிதமாக வழங்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன.

தற்போது போதியளவு சீனி கையிருப்பில் இல்லாமையால், இநத இரு மாதங்களுக்குமான நிவாரணத்தில், சீனி தவிர்ந்த ஏனைய பொருட்கள் மட்டும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

ஓரிரு தினங்களில் 2 ஆயிரம் மெற்றிக்தொன் சீனி எடுத்துவரப்படவுள்ளது. இவை தென்பகுதியில் லொறிகளில் ஏற்றப்பட்டு, தயாரான நிலையில் உள்ளன. பெரும்பாலும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் அது வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவை கொண்டுவரப்பட்டதும், நிவாரணத்திற்கு வழங்கப்படாத சீனி வழங்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ப)

## திருமறைக் கலாமன்ற ஒளிவிழா

திருமறைக் கலாமன்றத்தில் ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நாடகம், நடனம், இசை நிகழ்ச்சி இவற்றுடன் பலவேறு கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

# குமுதினி படகு அடிக்கடி பழுதடைவதால் புதிய படகை சேவையில் அமர்த்தக் கோரிக்கை

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான கடற்போக்குவரத்தில் ஈடுபட்டுவரும் குமுதினிப்படகு - அடிக்கடி பழுதடைவதனால், புதிய ஒருபடகினைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு, யாழ் - அரசாங்க அதிபரிடம் கோரும் தீர்மானம் ஒன்று, கடந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து சேவையினை - வீதி அபிவிருத்தி அதிகாரசபையே பொறுப்பேற்று மேற்கொண்டு வந்தது. இதில் குமுதினிப் படகு மட்டுமே இந்தச் சேவையில் ஈடுபட்டது. அதுவும் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக பழுதடைந்து, சேவையில் ஈடுபடாமல் உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும் இக்குமுதினிப் படகு - பழுதடைந்த காலம் தொடக்கம், நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக கூட்டங்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதிநிதிகள் எவரும் பங்கு பற்றாமையால், முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க முடியாதுள்ளதாகவும், இது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (113)

# நெடுந்தீவுக்கான போக்குவரத்து சேவையை ஜனவரி முதல் விஸ்தரிக்கக் கோரிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்குப் பகுதிக்கான வடபிராந்திய போக்குவரத்துச் சேவையை ஜனவரி 1 ஆம் திகதி முதல் விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் தீர்மானம் கடந்த 23 ஆம திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இச்சேவையானது மாவிலித் துறைமுகம் ஊடாக ஆலமாவனப் பிள்ளையார் கோவில்வரை இடம் பெறவுள்ளதுடன், இப்பகுதியின் வீதியோர மரக்கிளைகள் அனைத்தும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி அப் பகுதி கிராம சேவையாளர்களின் அழைப்புடன் கடந்த வாரம் வெட்டித் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - கடந்தமாத ஒருங கிணைப்புக்குழு கூட்டத்தின் தீர்மானப்படி இன்றுவரைக்கும் பேரூந்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தரித்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன் தொடர்ந்தும் துறைமுகப் பகுதியிலே இரவு வேளைகளில் தரித்து நிறுத்தப்படுகிறது. இதனால் பாதசாரிகள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள்.

கடந்த மூன்று மாதகால கூட்டங்களுக்கு வடபிராந்திய போக்குவரத்து சபையினர் எவரும் வராமையினால் முழுமையான தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில், வாராந்தம் நடைபெற்றுவரும் ஆன்மீகச்சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 'சூரபன்மன் தவத்துக்கும் தர்மத்துக்கும் முதல்வன்' எனும் விடயம் தொடர்பாக பண்டிதர் செ.சிவபாதம் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

## 22 தம்பதிகளுக்கு பதிவுத்திருமணம்

கடந்த காலங்களில் திருமணம் புரிந்தும், இதுவரை பதிவினை மேற்கொள்ளாத 22 தம்பதியினருக்கு, காரைநகரில் பதிவுத் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

காரைநகர் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், காரைநகர் உதவி அரச அதிபர், யாழ்.மாவட்ட காணி பதிவாளரும், மேலதிக ஆணையாளருமான, ந.சதாசிவஐயர் உட்பட பலர் கலந்துகொண்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ப)

## திருவாசக முற்றோதல்

அல்வாய் வேலிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 6 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரை திருவாசகம் முறறோதல்- திருவாசகத் தென்றல் மு.மருதபிரான் தலைமையில் இடம்பெறும். ஓதுவார்கள், தொண்டர்கள் பங்குபற்றலாமென தேவஸ்தான நிர்வாகசபையினர் அறிவித்துள்ளனர்.

## வைத்தியசாலை அமைக்க 55 இலட்சம் நிதி தேவையென மதிப்பீடு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் கிராம வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு 55 இலட்சம் ரூபா தேவைப்படும் எனச் சுகாதாரத் திணைக்களம் மதிப்பீடு செய்துள்ளது.

இராணுவத்தினரால் பாவிக்கப்பட்ட இந்த வைத்தியசாலைக் கட்டடம் - அண்மையில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

மேலும் பொது மக்களின் நன்மை கருதி இந்த வைத்தியசாலையை உடனடியாக இயங்க வைக்க அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். (122)

## புதுவருட திருப்பலி

யாழ்.மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதுவருட நள்ளிரவுத் திருப்பலி 11.45 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். புதுவருடத்தன்று காலை முதல் திருப்பலி 6.30 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையிலும், இரண்டாம் திருப்பலி காலை 8 மணிக்கும் ஒப்புக் கொடுக்கப்படும்.

## கடற்தொழிலாளருக்கு கடனுதவி

(அரியாலை)

மருதங்கேணிப் பிரதேசத்தில் உள்ள 14 கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 3 கோடி ரூபா கடனடிப்படையில் வழங்குவதற்கு அரச அதிபர் முன்வந்துள்ளார்.

இந்த நிதிமூலம் கடற்தொழிலாளர்களுக்கு, கடற்தொழில் உபகரணங்கள் வழங்குவதற்கு, கடற்தொழிலாளர் சமாசம் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது. (122)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : ச.சங்கமன்
முகவரி : உடுத்துறை, தாளையடி.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ஆ.விஷ்ணுகாணன்
முகவரி : மறவன்புலோ மத்தி.

ஆறாவது அகவையில்



பெயர் : மா.திலக்சன்
முகவரி : மாரிசன்பதி.

எட்டாவது அகவையில்



பெயர் : ற.லக்ஸ்சியா
முகவரி : அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை.

பத்தாவது அகவையில்



பெயர் : ஆர்.மேஷி
முகவரி : 12/1 செண்மேரிஸ் றோட், ஹெத்தல, வத்தல.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------
------------------------------
முகவரி :--------------------
------------------------------
பிறந்த ஆண்டு:----------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------
பெற்றோர் ஒப்பம்

நல்லூர் கிளை மாநகராட்சி மன்றம்

# வருமானம் மட்டுமல்ல மனத்திருப்தியும் இன்னொரு வகையான நன்மைதான்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

*காலையில் எழுந்ததும் முதன்முதல் வேலையாக இந்தப் பூக்கன்றுகள் நன்றாக வளர்ந்திருக்கின்றனவா என்று பார்ப்பேன். பின்னர்தான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும். இதில் ஒரு வகையான திருப்தியும் ஏற்படுகின்றது. வருமானம் தருகின்றமை ஒருவகை நன்மை என்றால், இன்னொருவகையில் மனத்திருப்தியையும் நன்மையென்று குறிப்பிடலாம்.*



வி.ப.செல்வநாதன்

*உண்மை வாசற்படியைத் தாண்டுவதற்குள் பொய் ஊரைச் சுற்றி வந்துவிடும். உண்மை ஊரைச் சுற்றி வந்துவிட பொய் உலகைச் சுற்றி வந்துவிடும்.*

இந்த வாக்கியத்தோடு இணைந்த வகையில் 'கங்கா பாம்' என்ற பெயர்ப்பலகை காணப்பட்டது. இந்த அடையாளத்தைக் கண்டு, உரிய இடத்தே வந்துவிட்டோம் என்ற எண்ணி, 'கங்கா பாம்' உள்ளே சென்று அதன் உரிமையாளர் வி.ப.செல்வநாதனோடு உரையாடினோம். இவ்வாறான சிந்தனைகளைக் கரும்பலகையில் ஒவ்வொரு நாளும் எழுதுவதன் ஊடாக, அறிஞர்களின் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதை, தான் ஒரு கொள்கையாக எடுத்துள்ளதாகத் தெரிவித்து, எமது கேள்விகளுக்குப் பதில் தந்தார் செல்வநாதன்.

எனது பெயர் வி.ப.செல்வநாதன். A/L படித்துவிட்டு, வேலையில்லாமல் இருந்த காரணத்தால், நெசவு வேலையை ஆரம்பத்தில் செய்தேன். பின்னர் எனக்கு அச்சுவேலி பிரதேசசபையில் எழுதுவினைஞர் வேலை கிடைத்தது. அந்த வேலையோடு இணைந்து இந்த பாமையும் செயற்படுத்தி வருகின்றேன். எனது பிறந்த இடம் நல்லூர், முத்திரைச்சந்தியடி. தற்போது கங்கா பாம் வைத்து வாழ்ந்து வருகின்ற இடம் நெல்லியடி, கரவெட்டியாகும். கட்டுரைகள், சிறுகதைகள் என்று பலவேறு பத்திரிகைகளில் சில ஆக்கங்களையும் எழுதியுள்ளேன். பரம் செல்வா என்ற புனைபெயரில் எழுதியுள்ளேன்

1980 ஆம் ஆண்டளவில் இந்த கங்கா பாம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாம் வைப்பதற்கு முன்னர் நான் மிகவும் வறுமையான சூழலைத்தான் எதிர்நோக்கியிருந்தேன். இந்தச் சூழ்நிலை தொழில்மூலமாக என்னுடைய நிரந்தரத் தொழில்மூலம் ஒரு வசதியான வாழ்க்கையை வாழலாம் என்றோ, என்னுடைய பிள்ளைகளைப் படிப்பிக்கலாம் என்றோ நான் நம்பவில்லை.

நான் அச்சுவேலியில் அமைந்துள்ள பிரதேசசபையில் ஒரு எழுதுவினைஞராகக் கடமை புரிகிறேன். எனக்கு அரச ஊழியராக இருந்து கிடைக்கும் சம்பளத்தின் மூலமாக மட்டும் குடும்பத்தை வசதியாக வைத்திருக்க முடியாது என்பதை உணர்ந்ததின் காரணத்தால், ஒரு உதவித்தொழில் ஒன்றை செய்ய வேண்டும் என்ற சிந்தனை உருவாகியது.

அந்த சிந்தனையின் வெளிப்பாடாய் பல உதவித்தொழில்களை ஆராய்ந்தேன். நான் ஒரு நல்ல வாசகனாக இருப்பதன் காரணத்தால், எந்தவகையான தொழிலைச் செய்யலாம் என்று நூல்கள்மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்பினேன். கோழி வளர்ப்பு, தோட்டம் செய்தல் முதலான தொழில்கள் என் கண்ணில் பட்டன. எனினும், அந்தத் தொழில்களைவிட ஏதோவொரு காரணத்தால் இந்தப் பூக்கன்றுகளை அமைத்து ஒரு பாம் ஆகத் தொடங்கி, ஒரு தொழிலை மேற்கொள்ள நினைத்தேன்.

ரோசா வளர்ப்பது எப்படி, குரோட்டன் வளர்ப்பு எப்படி என்பன போன்ற நூல்களை அதிகமாக வாசித்தேன். அந்நூல்களில் குறிப்பிட்ட முறைகளின் அடிப்படையில் இந்தப் பாமை நான் தொடங்கினேன்.



ஆரம்பத்தில் எவ்வாறு பைகளில் பூக்கன்றுகளை வைக்கவேண்டும், ஐம்பத்துக்கு ஐம்பது பசளைகளை எவ்வாறு இட்டுக் கொள்ளவேண்டும், கிருமி நாசினிகளை எவ்வாறு பாவிக்கவேண்டும் என்கின்ற தகவல்களைப் பெற்றுக்கொண்டு, அவ்வாறு செயற்பட்டேன்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட குரோட்டன் ஒன்றை ஆரம்பத்தில் இரண்டு ரூபா ஐம்பது சத்திற்கு விற்றேன். அதன் பிறகு ஒவ்வொருவரும் இந்தப் பாம் பற்றி விசாரித்து வரத் தொடங்கினார்கள். வடமராட்சியில் கங்கா பாம் என்ற பெயர் எல்லோருக்கும் தெரிய வந்தது. அதன்பிறகு என்னுடைய வியாபாரம் அதிகரிக்கத் தொடங்கியது.

நான் படித்த அந்த புத்தகங்களில் பாம் ஒன்றின் ஒழுங்கமைப்புக்கள்தான் அதிகம் குறிப்பிடப்பட்டிருந்தன. பாதைகள் எவ்வாறு அமைக்கவேண்டும். தண்ணீர் குழாய்கள் மூலமாக தண்ணீரை எவ்வாறு செலுத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு கன்றுகளையும் கண்ணுக்குத் தெரியும்படியாக எவ்வாறு வைத்துக் கொள்ளவேண்டும் போன்ற பல ஆலோசனைகள் அந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருந்தன. இவை பெரிதும் எனக்கு உதவின என்றுதான் கூறவேண்டும். அதேமாதிரியான பாம்களை உருவாக்கும், அவற்றை விளக்கும் படங்கள் என்பனவும் இந்தப் புத்தகத்தில் குறிக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கொண்டு இந்தப்பாமை ஒன்றரைப் பரப்புக் காணிக்குள்தான் ஆரம்பித்தேன்.

இந்த கங்கா பாமின் மூலமாக என்னுடைய பொருளாதாரத்தை ஓரளவு வளர்த்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அதே நேரம், பிள்ளைகளையும் நன்றாகப் படிப்பிக்கக்கூடியதாக உள்ளது. இந்த பாமின் வெற்றிகரமான வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் என்னுடைய மனைவியே பெரிதும் காரணமாக இருக்கின்றார். அவர்தான் நான் வேலைக்குச் சென்ற பின்னர், பாமை சரியாக நிர்வகிக்கின்றார். இந்தவகையில் மனைவி புஷ்பராணியின் ஒத்துழைப்பு மிகமிக முக்கியமானது.

இங்கிலாந்தில் இருந்து வருகின்ற ஒரு வகை மருந்தினைப் பயன்படுத்தி, விரைவாக வளருகின்ற மரக்கன்றுகளை நாங்கள் உருவாக்குகிறோம். லக்ஸ்பிறே பைகளை நன்றாக வெட்டுவதன் மூலமாக, கன்றுகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கமுடியும். 30 நாட்களில் பதியம் வைத்த ஒரு கன்றினை, நல்ல ஒருநிலையில் வளர்த்துக் கொள்ளமுடியும்.

பணத்திற்கு ஆசைப்பட்டு அடுத்த வாரம் பட்டு விடுகின்ற ஒரு கன்றை நான் விற்றுவிட முயற்சிப்பதில்லை. இதனால் என்னுடைய பாமிற்கு நிறையப்பேர் வருகின்றார்கள் என்னிடம் வருகின்றவர்களுக்கு உரிய பலன் கிடைக்கவேண்டும் என்பதையே நான் விரும்புகின்றேன். வெளிநாட்டு அலங்காரத் தாவரங்களையும் நான் இங்கே உற்பத்தி செய்கின்றேன். சைபிறஸ், அரைக் கேரியா இப்படி பல வெளிநாட்டுத் தாவரங் களும் இங்கே உள்ளன. ரோசாவை ஒட்டுவதன் மூலமாக இலாபங்கள் நிறையக் கிடைக்கின்றன.

ஏ-9 பாதை திறந்ததன் பின்னர், கண்டியிலிருந்துகூட இங்கே பலவிதமான தாவரங்களைக் கொண்டு வந்துள்ளேன். ஏனைய பல பிரதேசங்களிலும் எனக்குத் தாவரங்கள் கிடைக்கின்றன. அதேவேளை, வேறு பிரதேசத்துத் தாவரங்களை நான் இங்கே கொண்டுவந்து பதியிடும்போது, என்னுடைய முறைகளின்படி எமது பிரதேசத்திற்கு ஏற்றவகையில் அவற்றை எவ்வாறு உருவாக்கமுடியும் என்று யோசித்து, அதன்படி நான் அந்தத் தாவரங்களை உருவாக்குகின்றேன்.

வடமராட்சிக்கு, இடம்பெயர்வின் காரணமாக வந்த மக்கள் - எமது பாமைப் பற்றி வெளியில் சொன்னதன் காரணத்தால் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்துகூட வந்து எம்மிடம் பூக் கன்றுகளை வாங்கிச் செல்கிறார்கள்.

ஆரம்பத்தில் எமக்குத் தேவையான மரக்கனறுகளைக் காசுகொடுத்து வாங்கித்தான வளர்த்தோம். பல்வேறு இடங்களிலிருந்து இவற்றைக்கொண்டு வந்து நட்டுள்ளேன், பதிவைத்துள்ளேன். இப்போது சுற்று மதில்கள் கட்டி இந்த கங்கா பாமை அழகுடன் வைத்திருக்கின்றேன். முன்னர் மிகுந்த பற்றைகளாகவே இந்த இடங்கள் காணப்பட்டன.

குரோட்டன்ஸ், ரோசாக்கள், பழமரக் கன்றுகள், தோடை, தேசி போன்றவற்றை உற்பத்தி செய்கின்றேன். ஒரு மரக்கன்றை 75 ரூபா முதல் 400, 1000 ரூபாவரை விற்கக்கூடியதாக இருக்கின்றது. தேவையானபோது சாடிகளையும் சேர்த்துக் கொடுப்போம். இவை யும் இந்த விலைக்குள் அடங்கிவிடும். சிறிய நான்கு அங்குல ரோசா மட்டும் 350 ரூபா பெறுதியானது. அது நன்றாக வளர்ந்ததும் 1000, 1500 ரூபாவரை பெறுமதியானது.

நாங்கள் விற்கும் மரக்கன்றுகளில் 75 வீதமானவை எங்களது உற்பத்தி. ஏனைய பாம்களில்கூட இங்கிருந்து மரக்கன்றுகளை வாங்கிக்கொண்டு செல்கின்றார்கள். தனிநபர்கள் இவற்றைக் கொண்டுசென்று விற்றும் கொள்கிறார்கள். இப்படியான வாடிக்கையான வியாபாரிகள்கூட இருக்கின்றார்கள்.

காலையில் எழுந்ததும் முதன்முதல் வேலையாக இந்தப் பூக்கன்றுகள் நன்றாக வளர்ந்திருக்கின்றனவா என்று பார்ப்பேன். பின்னர்தான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும். இதில் ஒருவகையான திருப்தியும் ஏற்படுகின்றது. வருமானம் தருகின்றமை ஒரு வகை நன்மை என்றால், இன்னொருவகையில் மனத்திருப்பதியையும் நன்மையென்று குறிப்பிடலாம். இந்தப் பூங்கன்றுகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டிருந்தால், அவற்றைப் போக்குவதற்கு உரிய மருந்தினைப் பயன்படுத்தி, அதனைப் போக்கிக்கொள்வேன். நோய்களுக்காக இந்தக் கன்றுகளுக்குப் பாவிக்கப்படும் மருந்தின் பெறுமதி- ஒரு பத்தாயிரம் ரூபா என்றால், அந்த நோய் தீர்ந்து மரங்கள் கொடுக்கின்ற பயன் ஒரு இலட்சம் ரூபா வரையும் இருக்கும். இந்து மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றில் இருக்கும் பூமரங்களில் என்னுடைய பாமிலிருந்து கொண்டுசெல்லப்பட்டவையே பெரும்பாலும் உள்ளன. இவற்றைச் சென்று பார்க்கும்போது மனமகிழ்ச்சி உண்டாகின்றன.

ஒவ்வொரு மருந்துகளையும் இந்த பாமிற்குத் தேவையானவற்றை வாங்கும்போது, அதில் எழுதப்பட்ட ஆங்கில வாசகங்களை மிகச்சரியானமுறையில் வாசித்து அறிவதற்கு என்னிடம் போதிய ஆங்கில அறிவு இல்லாமல் இருக்கின்றது. இதனால் 'ஆங்கில அறிவை ஒருவன் பெற்றுக்கொள்வானாயின், முழுமையான வெற்றியை எந்தத் துறைக்குச் சென்றாலும் பெற்றுக் கொள்ளலாம்' என்ற உணர்வு என்னிடத்தில் தோன்றியுள்ளது. ஆங்கில்ம் அனைவருக்கும் முக்கியம் என்றே கூறவிரும்புகிறேன். இவ்வாறு கூறி, மனத்திருப்திப்படும் இவருடைய கருத்துக்களைக் கேட்டு நாங்களும் மனத்திருப்தி அடைந்தோம்.

ஒரு 'மனிதனுக்கு தொழில் என்பது எவ்வளவு முக்கியத்துவமானது என்பதுடன், அதில் காட்டும் அக்கறையும், ஆர்வமும் எவ்வளவு முக்கியமானது என்பதையும் உணரக்கூடியதாகவுள்ளது.

நேர்காணல் - பூ.நகுலன்

## வாரம் ஒரு சிறுதொழில்

## சவ்வரிசி செய்யும் முறை

உணவு உட்கொள்ளமுடியாமல் பலவீனமாக இருக்கும் நோயாளிக்கு சவ்வரிசிக் கஞ்சி கொடுக்கச் சொல்வார்கள். அந்தச் சவ்வரிசி ஒன்றும் வயலில் விளைவதில்லை. இது ஒரு தனிப்பட்ட தானியம் அல்ல என்பதும் பலருக்குத் தெரியாது. சவ்வரிசி என்பது - கையினால் அல்லது இயந்திரத்தினால் தயாரிக்கப்படும் ஒருபண்டமாகும். நாமும் இந்த சவ்வரிசியைக் குறைந்த அளவில் குடிசைத் தொழிலாகச் செய்து விற்பனை செய்யமுடியும்.

இது அதிகமானனோருக்குத் தேவைப்படும் ஒரு பண்டமாக இருப்பதனால், நன்கு விற்பனையாகி அதிக இலாபமும் கிடைக்கும். சவ்வரிசி தயாரிப்பதற்கான மூலப்பொருள் மரவள்ளிக்கிழங்காகும். மரவள்ளிக்கிழங்கு எக்காலத்திலும் குறைந்தவிலையில் கிடைக்கக்கூடியதாகும். சில காலங்களில் 5 அல்லது 6 ரூபாவிற்கும் விற்பனையாவதுண்டு. அக்காலத்தில் தேவையான அளவு சவ்வரிசியைத் தயார் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

இரண்டு விதமாக மரவள்ளிக்கிழங்கைப் பயன்படுத்தி, சவ்வரியைச் செய்துகொள்ளலாம். மரவள்ளிக்கிழங்கு மாவைச் சிலர் பயன்படுத்துவர். சிலர் பச்சைக் கிழங்கை அரைத்தும் செய்துகொள்வர்.

சிறிய அளவில் சவ்வரிசி செய்யும் முறைபற்றிப் பார்ப்போம்.

நல்ல தரமான முற்றிய மரவள்ளிக்கிழங்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஈயம் பூசப்பட்ட, வாய் அகன்ற பாத்திரம் ஒன்றை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்தப் பாத்திரத்தில் கிட்டத்தட்ட இரண்டரை லீற்றர் தண்ணீர் கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். அந்தப் பாத்திரத்தின் வாயைச் சுத்தமான வெள்ளைத் துணியினால் மூடிக்கட்டிவிடவேண்டும்.

மரவள்ளிக்கிழங்கை நீரில் இட்டு, நன்றாகச் சுத்தம் செய்து கழுவிக்கொள்ளவேண்டும். பின் தோலை உரித்து, கிழங்கை மட்டும் எடுத்துக்கொள்ளவேண்டும். தோல் அகற்றப்பட்ட கிழங்கைத் தேங்காய் துருவுவதுபோல் துருவி எடுத்துக்கொள்ளவேண்டும். வாயைமூடி துணி கட்டப்பட்ட பாத்திரத்தில் துணிமீது கொஞ்சம் துருவிய மரவள்ளிக் கிழங்கை வைக்கவேண்டும். அதில் கொஞ்சம் நீர்விட்டு பிசைந்து பிழிந்தால், பால்போன்று பாத்திரத்திற்குள் வடியும். மரவள்ளித்துருவல் சக்கையாக வரும்வரை நீர்விட்டுப் பிழிந்துவிடவேண்டும். இவ்வாறு எல்லா மரவள்ளிக் கிழங்குத் துருவலையும் பாலாகப் பிழிந்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

(தொடரும்....)

# கேள்வியும் பதிலும்

விளக்கமளிப்பவர் –
சு.இராஜதுரை, பீடாதிபதி,
விவசாயபீடம்,

**எனது நெல்வயல்களில் களைகள் இடையூறாக உள்ளன. இதற்கு பல மருந்துகள் விற்பனைமுகவர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன. இவற்றை நாம் பாவிப்பது எப்படி? எந்தக் களைகளுக்கு எப்படியான மருந்துகளை விசிறலாம்?**

*பொ.விஜயகுமார் கோப்பாய்.*

**இரசாயனமுறை களை கட்டுப்பாடு.**

அண்மையில் சிபாரிசு செய்யப்பட்ட மிக மலிவான களை கொல்லிகளைப் பாவித்து, வினைத்திறனாகக் களைகளைக் கட்டுப்படுத்தமுடியும். அநேகமான இக் களை கொல்லிகள் 15-20 நாட்களுக்குள் களைகளை முற்றாக கட்டுப்படுத்தி விடுவதால், நெற்பயிரில் களைகள் 30-40 நாட்கள்வரை பூரணமாகக் கட்டுப்படுத்தப் படுகின்றது. இச்சூழல் நெற்பயிரின் சிறப்பான ஆரம்ப வளர்ச்சியை உறுதி செய்வதுடன், பயிரின் விளைச்சலில் ஏற்படுத்தும் தாக்கத்தை இல்லாமல் செய்து விடுகின்றது. ஆனால், மானாவாரியாக மழையை நம்பிச்செய்யப்படும் நெல் சாகுபடியில், இக்களைகொல்லிகளின் பாவனை - வயலிலுள்ள நீரின் அளவைப் பொறுத்து, மட்டுப்படுத்தப்படலாம். காரணம் - களை கொல்லிகளைப் பிரயோகிப்பதற்காக வயலிலுள்ள நீரை வெளியேற்றும் செயல்முறை இங்கே கைக்கொள்ள முடியாமல் இருக்கிறது. இருப்பினும், வயலிலுள்ள நீரின் அளவைப் பொறுத்து சற்று முன்பாகவோ, அல்லது பின்பாகவோ இக் களை கொல்லிகளைச் சரியான அளவில் பாவிப்பதன்மூலம், சிறப்பான முறையில் களைகொல்லிகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

முக்கியமான சில களைகொல்லிகளும், அதனைப் பாவிக்கும்முறையும் கீழே தரப்பட்டுள்ளன.

**கோல் - Goal (Oxyflorfen 240 g/l - Ec)**

இந்தக் களை நாசினி புற்கள் முளைக்கமுன்பு விசிறப்பட வேண்டிய களை நாசினியாகும். நெல் விதைத்து முதல் மழை பெய்து, 3-4 நாட்களுக்குள் இந்தக் களை நாசினியைப் பாவிக்கவேண்டும். ஏக்கருக்கு 100 மி.லீற்றர் களை நாசினியை 450-500 லீற்றர் நீரில் கலந்து, சீராக விசிறவேண்டும். சிறப்பான பாவனை மூலம் சுமார் 30 நாட்களுக்கு வினைத்திறனான களை கட்டுப்பாட்டை எதிர்பார்க்கலாம். இது ஒரு மலிவான களை கொல்லியாகும்.

**கொமாண்ட் - (command (clomozon 3 ME)**

இந்தக் களை நாசினியும் - கோல் போன்று, விதைத்து முதல் மழை பெய்து 3-4 நாட்களுக்குள் பாவிக்கவேண்டும். ஏக்கருக்கு 300 மி.லீற்றர் போதுமானதாகும்.

**சொபிற் - (Sofit )- Pretilachlor 300 g/l - EC)**

இந்தக் களை நாசினியும் - விதைத்து முதல் மழைபெய்து, 3-4 நாட்களுக்கு பாவிக்கவேண்டும். ஏக்கருக்கு 640 மி.லீற்றர் போதுமானதாகும்.

**நொமினி - Nominee (Bisbyuribac sodium 100 sc)**

இந்தக் களை நாசினி புற்கள் மற்றும் அகன்ற இலைக் களைகள் யாவற்றையும் கட்டுப்படுத்தும் மலிவான் ஒரு களைநாசினியாகும். ஏக்கருக்கு 120 மி.லீற்றர் களை நாசினியைப் பயன்படுத்தவேண்டும். நெல் முளைத்து 7-12 நாட்களுக்குள் இதைப் பயன்படுத்தும்போது, சிறப்பான பலாபலனை எதிர் பார்க்கலாம. வயலில் நீர் தேங்கி நிற்காதநிலையில், இந்தக் களை நாசினியைப் பயன்படுத்தவேண்டும். இதனால், வயலின் நீர் நிலையயைப் பொறுத்து 7-12 நாட்களுக்குள் இதைப் பயன்படுத்தலாம்.

**கிளின்செர் - (Clincher) Cyhalopop butyl EC**

இந்தக் களை நாசினியையும் நொமினி போன்று விதைத்து 7-12 நாட்களுக்குள், வயலில் நீர் இல்லாத நிலையில் பாவிக்கவேண்டும். ஏக்கருக்கு 400 மி.லீற்றர் போதுமானதாகும்.

**3,4, டி.பி.ஏ. - (புறப்பனில் - Propanil)**

இந்தக் களை நாசினியை வயலில் நீரில்லாத நிலையில் 7-12 நாட்களுக்குள் ஏக்கருக்கு 3.2 லீற்றர் வீதமாக பாவிக்கவேண்டும். இந்தக் களைகொல்லியின் விலை அதிகமாக இருப்பதால், இதற்குப் பதிலாக நொமினி, கிளின்கர், கோல் போன்ற மலிவான களை் கொல்லிகளில் ஒன்றைப் பாவிக்கும்போது இந்தக் களைகொல்லியின் பாவனையைத் தவிர்த்துக் கொள்ளலாம்

**எம்.சி.பி.ஓ. (பீனொக்சி)**

இந்தக் களைகொல்லி - கோரை வகைக்களைகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாவிக்கப்படுகிறது. நெல் முளைத்து, 18-25 நாட்களுக்குள் ஏக்கருக்கு 800 மில்லி லீற்றர் களைநாசினியைப் பாவித்து, சிறப்பாகக் கோரைவகைக் களைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

**தகவல் தொடர்புமையம்,**
**மாணவர் பகுதி, விவசாயபீடம்.**

# கோழிகளின் நோய்களும் தடுக்கும் முறைகளும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

உணவு அருந்தாது, நோய் ஏற்பட்ட இரண்டு நாட்களில் இறந்த கோழியை மரண பரிசோதனை செய்துபார்த்தால், தாக்கப்பட்ட கிருமியின் தன்மைக்கேற்ப குடற்தொகுதி வீங்கிப் பெருத்து இருக்கும். வெட்டிப் பார்த்தால் இரத்தத் தன்மை சேர்ந்த மலத்தினைக் காணலாம். எனவே, நோய் ஏற்பட்ட உடன் கால்நடை வைத்தியரின் ஆலோசனையுடன், தகுந்த மருந்தைக் கொடுத்தால் கோழியை இறப்பில் இருந்து காப்பாற்றலாம்.

**வெள்ளைக்கழிச்சல்**

இந்த நோய் கோழிகளில் சல்மனெல்லா, ஈசேரிளை போன்ற பக்றீரியா கிருமிகளால் ஏற்படுகின்றது. குஞ்சுப்பருவத்தில் இந்த நோய் ஏற்பட்டால், அதிக எண்ணிக்கையான குஞ்சுகள் இறக்கநேரிடும். பெரிய கோழிகளில் இறப்பை ஏற்படுத்தாவிடினும், வளர்ச்சியையும், உற்பத்தியையும்,பாதிக்கும்,

***நோயின் அறிகுறிகள்:-***

குஞ்சுகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து உணவருந்தாமல் நிற்கும். மலம் வெள்ளைக் கழிச்சலாக இருக்கும். குஞ்சுகள் நாளுக்கு நாள் இறந்துகொண்டேயிருக்கும், பெரிய கோழி களாயின் வளர்ச்சி, உற்பத்தி, என்பன வீழ்ச்சியடையும். கோழிகள் சடுதியாக இறக்கும், இந்த நோய்க்கு பியுறோசொலிடோன், என்ரறோபுளெக்சின் போன்ற மருந்துகள் கொடுக்கப்படல் வேண்டும் உடனடியாக உங்கள் பகுதி மிருக வைத்தியரின் ஆலோசனையைப் பெறுவது நன்று.

**கெற்பக் குடல் அழற்சி**

இது முட்டையிடும் கோழிகளைத் தாக்கும் நோயாகும். சல்மானல்லா போன்ற பக்றீரியாக்களால் ஏற்படுகின்றது. இது ஒரு பரம்பரை வியாதி போன்றது. முட்டையினூடாகவே இந்த நோய் பரவுகின்றது.

***நோயின் அறிகுறி:-***

கோழிகள் நிறம்மாறி (வெளிறி) பூ வெள்ளையாக வந்து இறந்துவிடும். இந்த நோயினால் அதிகமான கோழிகள் இறக்காவிட்டாலும், சடுதியாக ஒவ்வொரு கோழியாக இறக்கும். பாதிக்கப்பட்ட கோழியுள்ள கூட்டில் அனைத்து கோழிகளின் முட்டை உற்பத்தியும் வீழ்ச்சியடையும். இறந்த கோழியை மரணபரிசோதனைக்குட்படுத்த வெட்டிப்பார்த்தால், கருப்பையில் முட்டை சுருங்கி அல்லது உடைந்து, மஞ்சட்கரு கலந்து காணப்படும்.

இந்த நோய்க்கு பியுறோசொலிடோன், என்ரகுறாபுளொக்சின் போன்ற மருந்துகள் பயன்தரும்.

**குடற்புழு**

கோழிகளின் வளர்ச்சியையும், உற்பத்தியை யும் பாதிக்கும் காரணி குடற்புழுவாகும். இதில் வட்டப்புழு. நாடாப்புழு என இருவகைப் புழுக்கள் உள்ளன. இவை கோழிகளின் வளர்ச்சியையும், உற்பத்தியையும் பாதிக்கின்றது. கோழிகளில் குடற்புழுக்கள் இருப்பின், அவற்றின் வளர்ச்சி, முட்டை உற்பத்தி என்பன குன்றும், கோழிகள் வெளிறிக்காணப்படும்.

நோஞ்சலாகி திடீரென இறப்பும் ஏற்படும். குடறபுழுவிற்கு - கோழிக்குஞ்சுகளில் முதலாம் மாதமும் பின்னர், இரண்டாம் மாதத்திற்கு ஒரு முறையும் பூச்சி மருந்துகள் கொடுக்கப்படவேண்டும்.

வட்டப்புழு பொதுவாக எல்லா கோழிகளிலும் காணப்படும். இதற்குப் பிப்பிரசீன், வேமின் போன்ற மருந்துக்களைக் கொடுக்கலாம் நாடாப்புழு காணப்பட்டால், மன்சொனில் என்ற மருந்தை கால்நடைவைத்தியரின் ஆலோசனையுடன் பாவிக்கவேண்டும்.

**கோழிப் பேன்**

சிறு அளவில் கோழிப் பண்ணை வைத்திருக்கும் அதிக பண்ணையாளருக்கு வேதனையைக் கொடுக்கும் புற ஒட்டுண்ணி கோழிப்பேன் - இது கோழிகளில் இரத்தத்தை உறுஞ்சக்கூடியது - இவை இரத்தத்தை உறிஞ்சுவதால், உற்பத்தி குறையும். பராமரிப்பவருக்கும் தொல்லைகள் ஏற்படலாம். கோழிப் பேனுக்கு அசன்டோல், கிப்பிறகோல், கோரிக்சுறை, மருந்துகளை கால்நடை வைத்தியரின் ஆலோசனையுடன் பாவிக்கவும்.

கோழிகளில் ஏற்படும் முக்கிய நோய்கள்பற்றி ஆராய்ந்துள்ளோம். கோழிகளில் வேறு சில நோய்களும் ஏற்படலாம்.

*உதாரணமாக:-* பெரியஈரல்நோய், கோழிகளின் பாதத்தில் கட்டி ஏற்படுதல், சயினஸ் அழற்சி.

கோழிகள் நோய் வாய்ப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஊகித்து அறிந்து கொண்டால், உடனேயே உங்கள் பகுதி கால் நடைவைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.

கோழிவளர்ப்பில் சில முக்கிய விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை. அவையாவன -

சரியான முறையில் கூடு அமைத்தல்,

குஞ்சுக்களுக்கோ அல்லது கோழிகளுக்கோ சரியான இடவசதியைக் கொடுத்தல்.

சிபார்சு செய்யப்பட்ட பண்ணைகளில் இருந்து குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளல்.

குஞ்சுகளுக்கு உரிய பருவத்திற்கு ஏற்ற உணவுகளைக் கொடுத்தல்.

நோய்த்தடுப்பு மருந்துகளை உரிய காலங்களில் கொடுத்தல.

பூச்சி மருந்தினை உரிய நேரத்திற்குக் கொடுத்தல்.

கோழித்தீன், தண்ணீர் பாத்திரங்ளை சரியான அளவில் பாவித்தல்.

கூட்டிலுள்ள, கோழிகள் இருக்கும் கூடம் ஈரலிப்பற்றதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய முறைகளை ஒழுங்காகக் கடைப்பிடித்தால், கோழிகளில் நோய்கள் ஏற்பட்டு வீணான இறப்பு ஏற்படுவதைத் தவிரத்து, அதிக இலாபத்திணைப் பெற்றுக் கொள்ளலாம்.

**Dr.M.தங்கராஜா B.V.Sc.mse (SL)**
**அத்தியட்சகர், கால்நடை வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

# குடாநாட்டு நெற்பயிரில் இலைசுருட்டியின் தாக்கம்

யாழ். மாவட்டத்தில் தற்போது நெற்பயிர்களில் இலைச்சுருட்டி அல்லது இலை மடிச்சுக்கட்டிப் பீடையின் தாக்கம் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டிருப்பதாக உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, விவசாயிகள் தமது நெற்பயிர்களைக் கூர்ந்து அவதானிக்குமாறும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய காலநிலை இந்தப் பீடையில் பெருக்கத்திற்குச் சாதகமாக இருப்பதுடன், தாக்கப்பட்ட பயிர் இலைகள் நீளமாகச் சுருட்டப்பட்டு அல்லது இலைகள் மடிக்கப்பட்டு இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பீடை, பயிரின் எல்லாப் பாகங்களையும் தாக்கக்கூடியது. தாக்கப்பட்ட இலையின் சுருளை அல்லது மடிப்பை விரித்துப் பார்க்கும்போது, அவற்றினுள் பழுப்பு வெண்ணிறமான புழுவையோ அல்லது எச்சங்களையோ காணமுடியும். இலைகளிலுள்ள பச்சயத்தை இப்புழுக்கள் உணவாக உட்கொள்வதனால், தாக்கப்பட்ட பயிரிலையின் நுனிப்பகுதி, வெள்ளை நிறமாகக் காணப்படும். இந்தத் தாக்கத்தைப் பயிரில் அவதானித்தால், உடன் குளோறோ பைறிபொஸ், பூச்சி நாசினி மருந்தை எடுத்து 1 அவுன்ஸை 3 கலன் நீரில் கலந்து, ஒரு ஏக்கருக்கு 40 கலன் மருந்துக் கலவை என்ற ரீதியில் விசிறி, இதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

கிருமிநாசினி மருந்து விசிறிய பின்னர் 5 அல்லது 6 மணிநேரம் மழை பெய்யாது இருப்பதும் முக்கியமானது. எனவே, மழை வரும் சூழலைப் பார்த்து மருந்தை விசிற வேண்டும்.

அத்தோடு, நெல்வயலில் நீர் தேங்கி இருக்கும் இடங்களில், கால் ஏக்கருக்கு 200 கிலோகிராம், சீமைக்கிழுவை இலை அல்லது வெட்டிய எருக்கலை இலை அல்லது நொச்சி இலைபோன்றவற்றை இடுவதனால், இதுபோன்ற தீங்குவிளைவிக்கும் பூச்சிகளின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்தமுடியும் என்வும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 70/= | 60/= | 70/= | 70/= | 80/= | 70/= | 40/= |
| வெண்டிக்காய் | 25/= | 20/= | 30/= | 20/= | 35/= | 20/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 65/= | 70/= | 60/= | 70/= | 65/= | 70/= |
| கத்தரிக்காய் | 50/= | 60/= | 70/= | 50/= | 80/= | 50/= | 40/= |
| பாகற்காய் | 60/= | 70/= | 120/= | 80/= | 60/= | 60/= | 80/= |
| கரட் | 40/= | 40/= | 60/= | 40/= | 60/= | 40/= | 60/= |
| பீற்றூட் | 30/= | 70/= | 80/= | 40/= | 40/= | 30/= | - |
| முருங்கைக்காய் | 150/= | - | - | - | - | - | 120/= |
| வெங்காயம் | 60/= | 50/= | 50/= | 45/= | 50= | 50/= | 50/= |
| பச்சை மிளகாய் | 60/= | 60/= | 60/= | 40/= | 70/= | 60/= | 40/= |

# நத்தார் சிறப்பு மலர்

## இன, மத, மொழி பேதங்களற்று கொண்டாடப்படும் கிறிஸ்மஸ்

கிறிஸ்தவ மக்களின் மிகவும் பிரதானமான விழாவாக கிறிஸ்மஸ்விழா காணப்படுகிறது. கிறிஸ்தவ மக்களின் புனித பண்டிகையாக கொண்டாடப்பட்டுவரும் இவ்விழாவானது, இன்று உலகெங்கும் இன, மத, மொழி, பேதமற்று மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டுவருகின்றது. அண்மைக் காலங்களில் இவ்விழா, வெறுமனே சமய விழாவாகமட்டுமன்றி 'அமைதிக்கான உலகப்பொது விழாவின்' அடையாளமாகவும் மாறியிருக்கின்றது.

'கிறிஸ்மஸ்' என்பது கிறிஸ்து பிறந்த நாள் என்ற எடுகோளில் உருவாக்கம் பெற்ற நாளாகும். யூதமதப் பிண்ணனியில் எதிர்பார்க்கப்பட்ட மெசியாவாக விவிலிய ஏடுகள் எதிர்வுகூறிய உலகின் மீட்பராக, வல்லமைமிக்க தொடக்கமும் முடிவுமற்ற இறைபடைப்பவதாரமாக கருதப்படும் கிறிஸ்து, தெய்வீகநிலையில் வழிபாட்டுக்குரியவராக கொள்ளப்படும் அதேவேளை, உலகிற்குப் புதுநெறியை, புதிய வாழ்வுமுறையை, மேல்வரிச்சட்டமாக கொள்ளத்தக்க வாழ்வியல் ஒழுக்கத்தை வகுத்து வாழ்ந்து காட்டிய அவதார புருஷராகவும் கொள்ளப்படுகின்றார். எனவேதான் யூத, கத்தோலிக்க, கிறிஸ்தவ, மக்களால் மட்டுமன்றி பல்வேறு இன, மத, மொழி மக்களுக்கும் முக்கியமாகக் கொள்ளும் ஒன்றாக கிறிஸ்துவின் பிறப்பு உள்ளது. உலகவரலாற்று ஆசிரியர்கள்கூட கிறிஸ்துவின் பிறப்புக் காலத்தினை மத்தியாகக் கொண்டு (கி.பி - கி.மு) உலகவரலாற்றை ஒழுங்குக்கு கொண்டுவரும் பொதுமை நோக்கிற்கு அழுத்தந்தந்துள்ளனர். அவ்வழக்கே இனறு வரை நடைமுறையில் உள்ளது.

கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கையில் கிறிஸ்துவின் பிறப்பு, அவரின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, என்பனவும் மிகவும் முக்கியமரன ஆன்மீக நம்பிக்கைகள். பாவத்தால் அடிமைப்பட்டுப்போன மானிடத்தைமீட்க, இறைவன் தன் மகனையே உலகிற்கு அனுப்பி, மானிடத்தின் பாவங்களை சிலுவையாய் அவரில சுமத்தி, மானிட ஈடேற்றத்துக்காக அவரை பலியாக்கினார். ஆனால், கிறிஸ்து அளித்த நெறி புதியது. உலகம் எதிர்பார்த்த அரசராக இல்லாது, இல்லாமையின் இறுதித் தளத்தில் "மாட்டுக் கொட்டிலில்" பிறந்தார். அன்றைய மக்கள் சரி என நினைத்திருந்த சட்டங்களை கேள்விக்குரியதாக்கினார். 'சட்டம் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதா அல்லது மனிதன் சட்டத்துக்கானவனா' எனற கேள்வியை எழுப்பினார். வன்முறைக் கலாசாரம், மூடநம்பிக்கைகள், அடக்குமுறைகள், ஏதேச்சாதிகாரம் போன்ற அனைத்துக்கும் சவால்விடுத்த கிறிஸ்துவின்வாழ்வு, ஆயுதம் ஏந்தாத புரட்சியாக வெடித்தது. அகிம்சை நிலையில் தன்னை தற்கொடையாக்கும் தர்மத்துக்கு மேல்வரிச்சட்டமானது, 'எதிரியையே நேசிக்கும்' புதிய சமாதானத்தின் சித்தாந்தமானது, நேசிப்பினூடாக 'இனனா செய்தாரை ஒறுத்து அவர் நாண நன்னையம் செய்யும்' புதிய நெறியின் ஆரம்பமாகியது. அதனால்தான், ஏழ்மை வடிவமான 'வைக்கோல் முன்னிட்டியும்' அவமானத்தின் சின்னமாகிய 'சிலுவை'யும், கௌரவமும், புனிதமும்மிக்க அடையாளங்களாகின.

எனவேதான், கிறிஸ்து 'சமாதானத்தின்' அடையாளமாகவும் கொள்ளப்படலாயிற்று. அமைதியன் அரசனாக வர்ணிக்கப்படும் சிறிஸ்துவின் போதனைகள், ஒரு வகையில் 'சமாதனத்துக்கான இலக்கணங்கள்' எனக்கொள்ளத்தக்கது. 'உங்களுக்குச் சமாதானம்', 'உலகிற்கு சமாதானத்தை அளிக்கவே வந்தேன் 'சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்' என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளும், வாழ்வு உதாரணமும் இன்று சமாதானம் பற்றிப்பேசும் இடங்களிலெல்லாம் பேசப்படும் ஒன்றாக மாறியுள்ளது. குறிப்பாக கிறிஸ்துவின் பிறப்புக் காலத்தில் சமாதான ஒப்பந்தம் செய்தல், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல், யுத்தநிறுத்தம் செய்தல் என பல செயற்பாடுகள் உலகயுத்தங்கள் நடைபெற்ற காலங்கள் உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் அன்று தொடக்கம், இன்று வரை எமது நாடுவரை நடைமுறைப்படுத்தி வந்ததனை அவதானிக்கலாம். அது மட்டுமன்றி பல ஐரோப்பிய நாடுகளில், இக்காலம் விடுமுறைக் காலமாகவும், விஸா நடைமுறைகள் தளர்த்தப்படும் காலமாக பல்வேறு சலுகைகள், மானியங்கள் வழங்கப்படும் காலங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஒருவகையில் சுதந்திரமும், மகிழ்ச்சியும் மிகுந்த காலமாக ஆக்கப்படுகின்றது.

"உலகமயமாக்கல்' என்ற தொழில்நுட்ப அறிவியல் யுகத்தின் பரிணமிப்பில் கொள்ளப்படும் சிந்தனை, உண்மையில் இந்த நூற்றாண்டுக்குரியது அல்ல அது கிறிஸ்துவுடன் ஆரம்பித்துவிட்ட ஒரு உண்மையாகும். 'உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்' என்பதே அவரின் இறுதிவார்த்தையாகும். இதனை தமது பணியாகக்கொண்டு, அவரின் சீடர்கள், சீடர்களின் சீடர்கள்... என வளர்ந்த சமூகம் இரத்தம் சிந்தி, உயிரைத் துறந்து உலகெங்கும் தமது போதனைகளைப் பரப்பியது. இன்று உலகெங்கும் பரம்பியுள்ள கிறிஸ்தவசமயம் இதற்குச் சான்று பகர்கின்றது. எனவேதான் உலகமயமாக்கல் என்ற கருதுகோள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது. அது இன்றைய வியாபாரமார்க்க, அதிகார ஒடுக்குதல் நிறைந்த அறிவியல், வன்முறை மிகுந்த, சுதேசியங்களை அடித்துச் செல்லும் மரபாக இல்லாது - அகிம்சையை, தர்மத்தை, சமாதானத்தை, மனிதத்துவத்தை உலகெங்கும் எடுத்துச்சென்ற பொதுமையாக அது இருந்தது. அன்றைய காலகட்டத்தில் காலனித்துவ ஒடுக்குமுறையாளர்கள் தமது சுயநலத்துக்காக ஒடுக்குமுறை முகத்துடன் இதனை அனுகியமையும், திணித்தமையும் தவறானதாக இருந்ததுடன், பலபாரதூரமான விளைவுகளை தந்துநின்றாலும் இன்று அர்த்தத்துடன் உணரப்படும் சிந்தனையாக உள்ளது. கிறிஸ்மஸ் இதன் வெளிப்பாட்டு அடையாளமாக அமைந்துள்ளது. அது சமயமொன்றை எல்லை கடந்த கருத்தேற்பு விடயமாக மாற்றியுள்ளது.

இன்றைய கிறிஸ்மஸ் இதற்கென கொண்டுள்ள அடையாளங்களான, சாந்தோம்குறூஸ் (கிறிஸ்மஸ்தாத்தா) கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்மஸ் குடில்கள், வால் நட்சத்திரம், பனிபடர்ந்த காட்சி விம்பங்கள் போன்றன மகிழ்வின் குறிகாட்டிகளாக மாறிவிட்டிருக்கின்றன. இவை வெறுமனே ஆடம்பரங்களுடன், பகட்டாரங்களுடனும், கொண்டாட்டங்களுடனும் நின்றுவிடாது உண்மையான சிந்தனைகளை உட்கொண்ட கருத்தொருமித்த விழாவாக மாறுமாயின் அது, உண்மையினதும் சமாதானத்தினதும் விழாவாக மாறும்.

**யோ.யோ.ராஜ்குமார்.**


வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு
இனிய நத்தார் வாழ்த்துக்கள்

RENNY
DENTAL & OPTICAL SERVICE
பல் கட்டிக் கொடுக்கப்படும், மிதப்புப் பற்களுக்குக் கிளிப் செய்து கொடுக்கப்படும். கண் பரிசோதித்து, கண்ணாடி வழங்கப்படும்.
இல. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.:3703
(சி-1930)

பண்டிகை கால விசேட சலுகை
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.
ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=
அத்துடன் இலவசமாக E.mail மூலம் உங்கள் உறவுகளுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கலாம்.
25.12.2003 தொடக்கம் 01.01.2004 வரை மட்டுமே
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்
T.P: 021 222 2670 Fax:021 222 3214, E.Mail: del-smskr@eureka .lk

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்
கிளின்ரன்
Clinton Funeral Service
அந்தியகால சேவை
548, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P 222 3518

(சி-1929)

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மார்கழி 1 ஆம் திகதியிலிருந்து தை 1 ஆம் திகதிவரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
லைடன் புடவை நிலையம்
(பஸ் நிலையம் எதிர்)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2381
(சி-1933)

அனைவருக்கும் எம் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
தொலைத்தொடர்பு சேவையில் புதிய பரிமாணம்


(சி-1928)
சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
S.M.S
CARD SALES CENTRE
யாழ்.பஸ்நிலையம் முன்பாக
396, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு
எமது நத்தார் வாழ்த்துக்கள்
உலகத்தரம் வாய்ந்த பிரி இங்
இறபர்ஸ்டாம்
இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே
செய்துகொள்ளலாம்.
❖ மை தேவையில்லை
❖ பல வர்ணங்களில்
❖ நீண்டகாலப் பராமரிப்பு
❖ தண்ணீரில் அழியாது
❖ கவர்ச்சியானது
எது?
'யசோ ஸ்டாம்'
35, கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-1935)

அனைவருக்கும் எம் இனிய நத்தார் வாழ்த்துக்கள்
பொங்கிடும் பார்வையை பெற்றிடவும், உறுதியான அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிடவும் யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
எரிக் கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். T.P 222 2486
கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல. 80 கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல. 91 கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில். T.P 222 5233
(சி-1932)

# நத்தார் சிறப்பு மலர்

# உலகின் ஒளியாய் பிறந்த பாலகன் சமாதானத்தை கொண்டுவருவார்

## யாழ். ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி

2003 ஆம் கிறிஸ்து பிறப்பு விழா ஒரு புதிய சிக்கலான காலகட்டத்தில் நிகழ்கிறது. இலங்கை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இருந்துவந்த அரசியல் கருத்து வேறுபாட்டின் முறுகல்நிலையும், அதன் உச்சக்கட்டமான இன்றைய அரசியல் ஸ்திரமற்ற குழப்பநிலையும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாயினும், தமிழ் மக்களை பொறுத்தவரையில் மிகவும் வேதனைக்குரியதாகும். தமிழ் மக்கள் வாழ்வில் ஏதோ ஒரு சரித்திர திருப்பம் ஏற்படப்போகிறது. நிரந்தர அமைதியும், சாமாதானமும், சுதந்திரமும் நிறைந்த ஒரு வாழ்வு, மிக நீண்ட காலப்போர் அனுபவங்களின்பின் மலரப் போகிறது என, எண்ணியிருந்தவேளை, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் சிதறடிக்கப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம்பெற்ற காலம்முதல், அரசியல்வாதிகள் நீண்டகாலமாக நடத்திவந்த அரசியல் நேர்மையற்ற தன்மை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மீண்டும் ஒரு தடவை யுத்தம் மூழுமானால், அதன் தாக்கங்களையும், கோரவிளைவுகளையும் அனுபவிக்கப் போகிறவர்கள் தமிழ் மக்களே என்ற வகையில், போரைப்பற்றி கனவில்கூட அவர்கள் நினைக்கத் தயாராய் இல்லை. இலங்கை மண்ணில் இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வு ஏற்படுமானால் அது இலங்கையின் இரு முக்கிய அரசியல் கட்சிகளின் கூட்டு முயற்சியிலேயே ஏற்படமுடியும். இந்த இரு முக்கிய கட்சிகளின் தலைவர்களான ஜனாதிபதியும், பிரதமரும் பதவியிலிருக்கும் வேளையில், இவர்களின் மனதை இறைவன் பக்குவப்படுத்தவும், உரிய விதமாக திசைதிருப்பி இலங்கை மண்ணின் நீண்டகால இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண வழிவகுக்கவும்வேண்டி, தமிழ்மக்கள் அனைவரும இந்த இக்கட்டான வேளையில் இறைவனில் முழு நம்பிக்கை வைத்து, செபத்தில் ஈடுபட வேண்டுமென மீண்டுமொரு தடவை அழைப்பு விடுக்கிறோம்.



இரண்டு தசாப்தங்களாக போரையும், அதன் அழிவுகளையும் - அன்றாட அனுபவங்களாக கொண்டிருந்த தமிழ்மக்கள், எத்தனையோ அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் இழந்தவர்கள். பயத்தோடும், பதற்றத்தோடும் பாதுகாப்பில்லா நிலையில் தமது வாழ்வை மிக நீண்டகாலம் கழித்தவர்கள்.

இனியும் இந்த நிலையை தொடரவிடாமல் இந்த இக்கட்டான வேளையில், யார் பெயரையும், பெருமையையும் பெற்றுக் கொள்வது என்ற அதிகாரப்போட்டியில், தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை நாசம் செய்ய வேண்டாமென்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பெயராலும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மனிதாபிமான ரீதியில் அன்பு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமது 2003 ஆம் ஆண்டு மாவீரர்தின உரையில்- சமாதானத்துக்கான தனது உறுதிப்பாட்டை உலகம் முழுவதும் அறியத்தக்க விதமாக மிக ஆணித்தரமாக வெளிப்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

இந்த இக்கட்டான நிலையிலும், இச்செய்தியானது மன மகிழ்வையும் ஆறுதலையும் தருகிறது.

கடந்தகால போர் அனுபவங்களின் பின்னர் ஏனோதானோ என்ற ஒரு கட்டுப்பாடற்ற வாழ்வைவாழ எத்தனிக்கின்ற இளைய சமுதாயத்தினர் - தம் நிலையையும், போக்கையும் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வைக் கவனத்திற்கொண்டு, தம் இளைய சக்திகளை உரியவிதமாக வழிப்படுத்த வேண்டுமென வேண்டிக்கொள்ள விரும்புகின்றோம். இளமைத்துடிப்பில் சுதந்திரமாக எதையும் செய்யலாம் என்ற நினைப்பில், இன்று இளைஞர்கள் செய்து வருக'னற நடவடிககைகள் போர்க்கால குழந்தைகளின் உளவியல் தாக்கத்தையும், வெளிப்பாட்டையும் பிரதிபலிப்பதாய் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எதிர்கால தலைவர்களான இவர்கள் கவனத்தோடும், கண்ணியத்தோடும் வாழ்வை அணுகவேண்டும். தம் பொதுநலனுக்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும். போரின் பன்முகத் தாககங்களினால், எமது சமூக கட்டுமான அமைப்பில் குடும்பங்கள் மிகமோசமாக தாக்கப்பட்டுள்ளன. குடும்ப பாரம்பரிய ஒற்றுமை, திருமணபந்தம், பிள்ளை வளர்ப்பு, பெற்றோரை கனம்பண்ணுதல், கீழ்ப்படிதல் போன்ற பல விடயங்கள் இன்று குழப்பத்திற்கும், கேள்விக்கும் உள்ளாகியிருக்கின்றன. யாழ். மறை மாவட்டத்தில் மலர இருக்கின்ற புதிய ஆண்டில், குடும்பங்களில் அதிக கவனம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எல்லாத் தமிழ் குடும்பங்களிலும், விசேடகவனம் செலுத்தவேண்டிய ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். குடும்ப அமைப்பையும், கட்டுக்கோப்பையும் நாம் மீள ஒருதடவை கவனமுடன் பாதுகாத்து வளர்ப்போமானால், இன்று நாம் எதிர்நோக்குகின்ற இளைஞர்களுடைய பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் தானாகவே இல்லாது ஒழிந்துவிடும்.

இருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டனர் என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகளை திரும்ப திரும்ப படித்தும் செபித்தும் வேண்டிக்கொண்ட எமக்குக் கிடைத்த சிறு ஒளியாகிய இந்த சமாதான முன்முயற்சிகள், பெரு வெளிச்சமாக மாறி இலங்கைவாழ் தமிழ் மக்கள் அனைவர்மேலும் வீசவேண்டும் என்பதே எமது வேண்டுதலும் ஆசீரும் ஆகும்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலகன் இயேசு எமது இல்லங்களுக்கும் உள்ளங்களுக்கும் நீடித்த ஒளியையும் நிரந்தர சமாதானத்தையும் கொண்டுவர நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கிறோம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு 31.01.04 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்களுக்கு வழங்கப்படும். இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் டிவான் டின்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம். இன்றே விஜயம் செய்யுங்கள்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', 'அந்திவானம்' பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

குறிப்பு:-
எம்மிடம் டிவான் டீன் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன்வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். "பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி சனிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணி வரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்"

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

021 222 5542 (சி-1934) 212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

உத்தரவு பெற்ற சிங்கர் விற்பனையாளர். சகல விதமான மின் விசிறிகள், காஸ்குக்கர்கள், சிசில், சிங்கர் குளிர்சாதனப் பெட்டிகள், சிங்கர் தையல் இயந்திரங்கள், அதன் உதிரிப்பாகங்கள், துணி துவைக்கும் இயந்திரம் இவை அனைத்தையும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

ஊஷா ஏஜென்சி

62/32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-1931) T.P.: 222 6982

அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள்

Yarl Beach Inn
யாழ். பீச் இன்
(Sea Food Restaurant)
No.08 Old Park Road, Jaffna.
Tel: 021 222 5490

- குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்
- கார் தரிப்பிட வசதிகள்
- மாநாட்டு மண்டபம்
- இணைக்கப்பட்ட குளியலறை
- கீழைத்தேய மேலைத்தேய உணவுகள்
- உல்லாசப் பயணிகளுக்கு அனுபவம் வாய்ந்தோரின் சேவை.

(இலங்கை உல்லாசப் பயணிகள் சபையின் அங்கீகாரம் பெற்றது)

(சி-1927) உரிமையாளர்: S.சிலுவைராசா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# ரணிலைச் செயலிழக்க வைக்கும் சந்திரிகாவின் நகர்வுகள்...

சிறிலங்காவின் ஜனாதிபதி மற்றுமோர் அரசியல் அதிரடி நடவடிக்கையை திடிரென்று மேற்கொண்டு பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாட்டு இயக்கத்துக்கான, அதிகார வலுவினை மேலும் பலவீனப்படுத்தி, அதனை கிட்டத்தட்ட வெற்று அரசாங்கம் ஆக்கி வேடிக்கை பார்க்கும் கைங்கரியத்தை நிறைவேற்றியுள்ளார்.

ஏற்கனவே மூன்று முக்கிய அமைச்சுக்களை தன்வசமாக்கிக் கொண்டு, ரணிலுக்கும் அவரின் அரசுக்கும் நீங்கள் எதுவுமே செய்ய இயலாதவர்கள், நான் நினைத்தால் எனக்குள்ள அதிகாரவலுவைக் கொண்டு உங்கள் அனைவரையும் ஓர் நொடிக்குள் தூக்கி வீசிவிட முடியும் என மறைமுகமான அச்சுறுத்தலை விடுத்து அதிரவைத்த சந்திரிகா, தற்போது உள்துறை அமைச்சின் மேலும் பல அதிகாரங்களை பறித்தெடுத்து, தனது கைக்குள் ஏற்கனவே பறித்துக்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்ததன் மூலம் தனது சர்வாதிகாரத் தன்மையை மீண்டும் அழுத்தமாக வெளிக்காட்டியுள்ளார்.

ஒரு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் எந்தவிதமான காரணங்களுமின்றி ஒரு அமைச்சின் கீழ் வரும் நிர்வாக கட்டமைப்புக்களையும், அதற்கான அதிகாரங்களையும் ஒரு ஜனாதிபதி, நிறைவேற்று அதிகாரம் தன்வசம் இருக்கின்றதென்ற ஒரே காரணத்தையும், ஒரேயொரு பலத்தையும் கொண்டு நினைத்த மாத்திரத்தே அபகரித்துக்கொள்ள முடியுமானால், அந்த ஜனாதிபதி அதிகார பூர்வ ஆட்சியை நடத்தும் நாட்டின் ஜனநாயகமும், மக்களின் உரிமையும் பாதுகாக்கப்படுகின்றது என்று சொன்னால் எவர்தான் நம்புவார்கள்?

அப்படி எவரும், எந்த நாடும் நம்பினால் அதற்கு அல்லது அவருக்கு ஜனநாயகத்தின் வரைவிலக்கணம் என்னவென சரியாகத்தெரியாதென்றே கூறவேண்டும்.

இப்படி ஒவ்வொரு அமைச்சாகவும், அதிகாரமாகவும் பறித்து - ஒரு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் செயற்பாடுகளை முற்றாகவே முடக்கி அந்த அரசாங்கத்தின் தலைவரான பிரதமரையும், அவரின் கீழான அமைச்சர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்களையும் நிராகரித்து அனுமதிக்கும் உரிமையை ஒரு தனியாள் சட்டபூர்வ அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் எடுத்துக்கொள்ள முடியுமென்றால் அந்தநபர் மனித உரிமைகளையும், ஜனநாயக கோட்பாடுகளையும் புறந்தள்ளி மிதிக்கும் ஒரு கர்வமிக்க சர்வாதிகாரியாகத்தான் இருக்கமுடியும்.

இப்படி எழுதுவதைக் கொண்டு சந்திரிகா மட்டும் தான் ஒரு அகங்காரம்மிக்க சர்வாதிகாரியென்று நாம் கருதுகிறோம் எனக் கருத்திலெடுத்துவிடக் கூடாது இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அமுலுக்கு கொண்டு வந்தவரென ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்ற அரசியல் 'மந்திர வாதி' முதல் பிரேமதாஸா, விஜேதுங்க எனத் தொடர்ந்த அரசியல் தந்திரவாதிகள் அனைவருமே ஜனநாயகம் பற்றி உபதேசித்துக்கொண்டு அராஜகமான சர்வாதிகார ஆட் சியை நடத்தியவர்கள் தான்.

அந்த அடிச்சுவட்டில் வந்த, அதே அரசியல் பாரம்பரியத்தைச் சேர்ந்தவரான சந்திரிகா மட்டும் அதற்கு விதிவிலக்காக அமைவார் என எவரும் நம்புதல் முட்டாள் தனமேயாகும்.

நாளை ரணில்விக்கிரமசிங்க இதே பதவிக்கு வரும் வாய்ப்பு ஏற்பட்டால் அவரும் இந்த அடிச்சுவட்டை பின்பற்றுபவராகவே இருப்பார் என்பதில் ஐயமில்லை. அதனை அவரது மாமனார் காலத்து (ஜே.ஆர்.காலத்து) பாரம்பரியம் என இறுகப்பற்றிக் கொள்ளவே செய்வார்.

நிறைவேற்று அதிகாரகர்வம் அப்படித்தான் செய்ய வைக்கும். எனினும் அப்படி ஒரு வாய்ப்பு ரணிலுக்கு வரக் கூடிய சாத்தியத்துக்கு சந்திரிகா நிச்சயமாக வழிவிட்டுக் கொடுக்கப் போவதே கிடையாது. தனக்குப்பின் அந்த வாய்ப்பு வேறு எவருக்கேனும் கிடைக்கும் சூழல் ஏற்பட அவர் அனுமதித்தால், அது தனக்கே பெரும் ஆபத்தாகிவிடும் என்பதை நன்கு உணர்ந்தவராகவே அவருள்ளார்.

இப்போது தனக்கான அதிகாரங்கள் என அவர் கடந்த ஆட்சிக்காலத்தில் இறுக்கமாக வைத்திருந்த பாதுகாப்பு, நிதி, இனவிவகாரம் போன்ற பல முக்கிய அமைச்சுக்களை ரணில் அரசு பதவியேற்ற போது நிர்ப்பந்தத்தினதும் கடுமையான வற்புறுத்தலுடன் கூடிய அழுத்தத்தின் பேரிலுமே விருப்பமின்றிக் கையளித்தவர் சந்திரிகா.

எனவே அவர் அவற்றை ரணில் அரசிடம் கையளிக்கும் போதே தனக்குரிய ஒன்றை அவர்கள் அபகரிக்கிறார்கள் என்ற ஆதங்கத்துடன் கூடிய வெஞ்சினத்துடன் தான் பொறுப்பளித்திருப்பார்.

அப்போதும் அவர் - தன் நிறைவேற்று அதிகார மந்திரக் கோலைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டத்துடன் கூடிய மனோபாவத்துடன் தான் அதனைக் கையளித்திருப்பார்.

இப்போது அந்தக்காலம் வந்துவிட்டதாக அவர் நினைக்கிறார் போலும்! அவரது நடவடிக்கைகள் அதைத்தான் உணர்த்துகின்றன.

பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை அமைச்சுக்களை ஏற்கனவே தன்வசமாக்கிக் கொண்டுள்ள ஜனாதிபதி, அவற்றின் கட்டமைப்புக்கள், அவற்றின் கீழ்வரும் திணைக்களங்கள் அனைத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தி அனைத்தையும் தனது விசுவாசிகளின் பொறுப்பில் அவற்றை விட்டும் வருவதானது அரசாங்க நிர்வாகத்தில் ரணிலின் குரலுக்கு மதிப்பில்லாமல் செய்யும் நோக்கிலானதே என்பதில் சந்தேகமில்லை.

## நாடும் நடப்பும்




# மிகக்கொடிய எயிட்ஸ் நோய்க்குப் பலியாக உறவுகளை கொடுக்க நாம் விரும்பவில்லை

## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் தெரிவிப்பு

விடுதலை நோக்கிப்பயணிக்கும்நாம் - கொடிய எயிட்ஸ் நோய்க்கு எமது உறவுகளில் எவரையுமே பலிகொடுக்க விரும்பவில்லை, அந்தக் காரணத்தினாலேயே எயிட்ஸ் பிரசாரப் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்படுகின்றன என தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் தெரிவித்தார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் எயிட்ஸ் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை தொடர்பாக, செய்தியாளர் சந்திப்பொன்று நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே தங்கன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று எமது யாழ். குடாநாட்டை எயிட்ஸ் எனும் கொடிய ஆட்கொல்லிநோய் ஆக்கிரமித்துள்ளது. இதனையிட்டு, எமது தேசியத் தலைவர் தொடக்கம் போராளிகள் ஒவ்வொருவரும் மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறோம். நீடித்த, நிலையான சுதந்திரத்திற்காக, எமது எதிர்காலசந்ததி நிம்மதியாக வாழ்வதற்காக பாடுபடும்நாம், கொடியநோய் மூலம் எமது சந்ததி பலியாவதை அனுமதிக்கப்போவதில்லை.

குடாநாட்டில் தற்போது ஆறு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த இடத்திலே எச்.ஐ.வி கிருமி பரவுமாக இருந்தால், அது பாரிய விளைவை ஏற்படுத்தும். இதனால், இந்த நோய் பரவுவதை தடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளை உடனே மேற்கொள்ளும்படி தேசியத் தலைவர் எமக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைவாக - எமது மருத்துவ போராளிகள்குழு, தேசிய எழுச்சிப்பேரவையினர், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், ஆகிய பல தரப்பினரர் ஒன்றிணைந்து, தீவிரமான பிரசாரப் பணியிலே ஈடுபட்டு வருகிறார்கள். எமது சந்ததியை காக்கவேண்டிய பாரியபொறுப்பு - புத்திஜீவிகள், பெரியவர்கள் ஆகியோருக்கு உண்டு. அந்தப் பொறுப்பை எவரும் இலகுவில் தட்டிக்கழித்துவிடமுடியாது.

குடாநாடு இன்று பலதரப்பட்ட மக்கள் வந்துபோகும் இடமாக மாறியுள்ளது. வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டிலிருந்துவரும் எமது மக்கள் எனப்பலர் - தற்போது குடாநாட்டிற்கு வந்தவண்ணமுள்ளார்கள். விமானப்போக்குவரத்து, தரைவழிப்பாதையென பிரயாணங்களும் இலகுபடுத்தப்பட்டுள்ளது. இவைமூலம் எச்.ஐ.வி. எமது பிரதேசத்திற்கு வரவாய்ப்புண்டு.

இன்று எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் - அதனை இன்னொனுவருக்கு வழங்காமல் இருப்பதே அவர்கள் எமது தாய் நாட்டுக்குச் செய்யும் மிகப்பெரிய தியாகமாகும். எனவே, எயிட்ஸைக் கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பினரும் முழுமையாகப் பாடுபடுவோம் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அருண், யாழ் மாவட்டதுணை அரசியற் துறை பொறுப்பாளர் செம்மணண் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

# மனித நேய அமைப்பினர் மினிபஸ் சங்கத்துடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மினிபஸ் சேவைகள் தொடர்பாக நிலவும் குறைபாடுகள் தொடர்பாக, இலங்கை மனிதநேய அமைப்பு - யாழ் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினை சந்தித்து கலந்துரையாடவுள்ளது.

அண்மையில் கல்வியங்காட்டுப் பகுதியில் ஏற்பட்ட விபத்து சம்பவத்தையடுத்து, வுடமராட்சி பகுதிக்கான மினிபஸ் சேவைகளில் சிலமாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் காலதாமதத்தினால், அரச அலுவலகங்கள் உட்பட பயணிகள் பலர் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கால தாமதத்தை தவிர்க்கும் வகையில், மாற்றுத் தீர்வென்றை ஏற்படுத்துவது தொடர்பாகவே கலந்துரையாடவுள்ளதாக, மனித நேய அமைப்பின் யாழ் மாவட்ட உத்தியோகத்தர் இ.பகீரதன் தெரிவித்துள்ளார். கடந்த வாரம் நடைபெற்ற தமது மாதாந்த கூட்டத்தில் இது தொடர்பானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஆறுகால் மடம், பழைய வீதியை திருத்த புதியநிதி ஒதுக்கீட்டிலும் இடமில்லை!

## -அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிப்பு-

கடந்த 25 ஆண்டுகளாகத் திருத்தியமைக்கப்படாத நிலையிலுள்ள ஆறுகால் மடம் பழைய வீதியைப் புனரமைக்கப் புதிய ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் இடமளிக்கவில்லை என ஆனைக்கோட்டை, ஆறு கால் மடம், பழையவீதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

1970 ஆம் ஆண்டு மானிப்பாய் வீதியின் மிகமுக்கிய போக்குவரத்துப்பாதையாக இருந்துவந்த இந்தவீதி புதியவீதி அமைக்கப்பட்ட பின் புனரமைப்புப் பணிக்குட்படாது கைவிடப் பட்டது.

சுமார் ஒரு கிலோமீற்றர் வரையான நீளமுடைய இந்த வீதியானது காக்கைதீவு, அராலி, மானிப்பாய் முதலிய பகுதிகளுக்கு மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு மிக முக்கியமான பாதையாக இருந்து வருகின்றது.

ஓட்டுமடத்தினூடான வட்டுக்கோட்டை வீதி தடைப்பட்டிருந்த போது மக்கள் இந்த வீதியையே பயன்படுத்தி வந்தனர். தற்போது இந்தப்பாதை பாழடைந்த நிலையில் உள்ளதால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பெரிதும் சிரமப் படுகின்றனர். அண்மையில் பெய்த மழை காரணமாக வீதியில் இருந்து மண் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ள மையால் இந்தவீதி மேலும் மோசமடைந்த நிலையில் உள்ளது.

பழையவீதி, தற்போது பொதுமக்களால் பாழடைந்த வீதி என்று அழைக்கப்படுவதாக இந்த வீதியில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அரசாங்க அதிபர் உட்பட பலருக்கும் தெரிவிக்கப்பட்டன எனினும் இதுவரை எந்தச் சாதகமான பயனும் கிட்டவில்லை.

கடந்த வாரம் யாழ். செயலகத்தால் வெளியிடப்பட்ட புதிய ஆண்டுக்கான திட்டமிடலும் இந்த வீதிப்புனரமைப்புப் பற்றி எதுவும் தெரிவிக்கப்படாமை குறித்தும் அந்த மக்கள். மேலும் தமது கவலையை வெளியிட்டுள்ளார்கள்.

# நாட்டுக்கு நாடு வேறுபடும் கிறிஸ்மஸ் பண்டிகை



### பெத்தலகேம்

கிறிஸ்து பிறப்பிடமான பெத்தலகேமில், டிசம்பர் 16 ஆம் திகதி நத்தார் கொண்டாட்டம் ஆரம்பமாகிவிடும். அந்த நாளிலிருந்து, தொடர்ந்து ஒன்பது இரவுகள், ஒன்பது குடும்பங்கள் ஊர்வலமாக ஒவ்வொருவீட்டிற்கும் செல்வர். இந்த ஊர்வலத்தின்முன்னே, சிறுவனும் , சிறுமியும் - சூசை, மரியாள் போன்று உடை அணிந்து செல்வர். முதல் எட்டு இரவுகளிலும் அவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர்.

அங்கு அவர்கள் இறைவனைப் புகழ்ந்துபாடுவர். இந்த ஊர்வலம் நசரேத்திலிருந்து பெத்தலகேம் வரை இடம்பெறும்.

### அமெரிக்கா

அமெரிக்க நாட்டில் நத்தார் பண்டிகை தினத்தன்று, சிறுவர், சிறுமியர் தமது நீண்ட காலுறைகளை தந்தார் மரத்தில் தொங்கவிடுவர்.

இவர்கள் அறியாதவண்ணம் பெற்றோர், உறவினர் மற்றும் பெரியோர் அக்காலுறைக்குள் பரிசுப்பொருட்களை இட்டுவைப்பார்கள். இவற்றைக் கண்ட சிறார்கள் மகிழ்வடைவர்.

நத்தார் தினத்தன்று, வீடுகளில் வான்கோழி சமைக்கப்படும். அமெரிககாவை அண்டியுள்ள ஹாவாய்தீவுகளில் கிறிஸ்மஸ்காலநேரம் மிகவும் உஷ்ணமாக இருக்கும். நத்தார் பலிப்பூசையை அடுத்து, மக்கள் தங்கள் மகிழ்ச்சியை விளையாட்டுக்கள், சுற்றுலாக்களிலும் செலவழித்து மகிழ்வர்.

### தென் அமெரிக்கா

தென்னமெரிக்க நாடுகளில், நத்தார் காலத்தில் மிகுந்த வெப்பமாக இருக்கும். நத்தார் பண்டிகைக் காலங்களில் கடைத்தெருவுக்கு வருகைதரும் மக்களுக்கு, அவர்கள் குளிர்பானங்கள் வழங்கிமகிழ்வர்.

ஸ்பானிய ஆட்சி நிலவிய நாடுகளில், கிறிஸ்மஸ் ஜனவரி 6 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. அன்றையதினம் 'திருக்காட்சி' விழாவாகும்.

அன்றையதினம் சிறுவர், சிறுமியர் ஒட்டகங்களுக்கு உணவு கொடுப்பர். மூன்று இராசாக்கள் பாலன் இயேசுவைத் தரிசித்து வணங்கிச்சென்ற நிகழ்ச்சியை இது பிரதிபலிககின்றது.

### சுவீடன்

இங்கு நத்தார் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதியே ஆரம்பமாகிவிடும். ஏனெனில், டிசம்பர் 14 ஆம் திகதி புனித லூசியா நினைவுதினம். அன்று காலை ஒவ்வொருவீட்டிலும், வயது குறைந்த சிறுமி, லூசியாபோன்று வெள்ளை உடை அணிந்து, கைகளில் மெழுகுவர்த்தி மற்றும் மலர்ச்செண்டு தாங்கியவளாக வீட்டிலுளள அனைவருக்கும் காலை உணவு பரிமாறுவாள்.

அத்துடன், நத்தார் அன்று **Lut Fish** என்னும் சுவீடனில் பிடிக்கப்படும் சிறந்த ரக மீனைச் சமைத்து உண்பார்கள்.

### இங்கிலாந்து

ஆங்கிலேயருக்கு மார்கழி மாதம் பிறந்தாலே நத்தார் கொண்டாட்டம் ஆரம்பமாகிவிடும். டிசம்பர் 26 ஆம் திகதியை "பரிசுத்ததினம்" - (**Boxing Day**) என்கின்ற பகிரப்படும் நாளாக முக்கியத்துவப்படுத்திக் கொண்டாடுவர்.

அன்றையதினம் பரிசுப்பொதி அடங்கிய பெட்டிகளை, மக்கள் தத்தமது வீடுகளில் தயாராகவைத்திருப்பர். வருடம் முழுவதும் தமக்கு உதவிபுரிந்த பால்காரன், தபால்கரன், வேலையாள், ஆதரவற்றோர், அநாதைகள் ஆகியோருக்கு இந்தப் பரிசில்களை வழங்கி மகிழ்ச்சியுறுவர்.

நித்திரையில் இருக்கும் சிறுவரின் காலுறைக்குள் பரிசுகளை பெற்றோர் இட்டு வைப்பர். காலையில் துயில்விட்டெழுந்த சிறுவர்கள்- பரிசுப்பொருட்களைக்கண்டு, நத்தார் தாத்தாவே தமக்குப் பரிசுப்பொருட்களை அளித்ததாக நினைத்துமகிழ்வர்.

### இத்தாலி

இத்தாலியில் நத்தாருக்கு முன்தினம் விரதம் அனுஷ்டிப்பர். நத்தார் நள்ளிரவில் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள தாய்மார் தத்தமது வீட்டிலுள்ள பாலன் குடிலில் (**Bambino**) பாம்பினோ எனப்படும் துணிகளால் பொறிக்கப்பட்ட பாலன் இயேசுவை வைப்பர்.

அந்தநேரம் வீட்டிலுள்ள எல்லோரும் செபத்தில் ஈடுபட்டுத் தியானம் செய்வர். திருக்காட்சி விழாவுக்கு முன்னான இரவில் கிறிஸ்மஸ் தாத்தா **La Be Fana** எனும் வெண்ணுருவில் வருவார். அவரது ஒரு கையில் மணி ஒன்று இருக்கும். மணியோசை கேட்டதும் சிறுவர்களுக்கு நத்தாரின் வருகை தெரிந்துவிடும்.

மறுகையில் தடி காணப்படும். சிறுவர்கள் தீயசெயலில் ஈடுபடாதிருப்பதை அத்தடி அவர்களுக்கு நினைவூட்டும்.

நத்தார் தாத்தா பரிசாக பொதியொன்றில் வெறும் சாம்பலையே கொடுத்துவரும் வழக்கம் அங்கு இருந்துவருகிறது.

### மெக்ஸிக்கோ

இங்கு நத்தார் கொண்டாட்டம் டிசம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதிவரை நடைபெறும். நத்தாருக்கு இருவாரங்களுக்கு முன்னர், இவ்விடத்து மக்கள் கூடைகள் பின்னுவர். நத்தாருக்கு வேண்டிய பொருட்களை இட்டு வைப்பர்,

'பினற்றா' எனப்படும் வர்ணக் கடதாசியைக்கொண்டு, அமைக்கப்பட்ட கப்பல், சப்பாத்து, பறவை, மீன்போன்ற வடிவங்களாலான பெட்டிக்குள் பரிசுப்பொருட்களை இட்டு மறைத்துமூடி ஒட்டப்பட்டிருக்கும்.

இந்தப் பெட்டிகளைச் சிறார்களைக் கொண்டு உடைக்கும் நிகழ்வு இடம்பெறும். கண்கள் கட்டப்பட்ட சிறுவர் பினற்றா பெட்டியை உடைத்து பரிசுப்பொருட்களைப் பெற்று மகிழ்வர்.

### அலாஸ்கா

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட பகுதிதான் அலாஸ்கா. பல பகுதிகளிலிருந்தும் அங்கு குடியேறிய மக்கள், தத்தமது நாட்டுவழக்கப்படி கிறிஸ்மஸ் கொண்டாடுவர்.

கண்ணைக்கவரும் வர்ணக்காகிதத்திலான, ஒரு நட்சத்திரத்தை அமைத்து, அதனை உயர்த்திக் கொண்டு, விளக்குகளை ஏந்திய வண்ணம் சிறுவர் சிறுமியர் வீடுவீடாகச்செல்வர். இனிமையான பஜனை பாடுவர். அங்கு அவர்களுக்கு நம்மூர் கரோல்போல், நல்ல வரவேற்புக்கிடைக்கும். இது ஒருவாரம்வரை நடைபெறும்.



இரண்டாவது இரவிலிருந்து வீரர்கள்போல், உடையணிந்த இளைஞர்கள் சிறுவர்களைப் பின்தொடர்ந்து, அவர்கள் கொண்டு செல்லும் நட்சத்திரங்களைக் கவரமுனைவர். ஏனெனில் குழந்தை இயேசுவை ஏரோது அரசன் கொல்லத்தேடியதை நினைவூட்டுவதாக அமைகின்றது.

### ஸ்கொட்லாந்து

நத்தார் 'பனொக்ஸ்' (**Bannocks**) எனப்படும் கேக் தயாரிக்கப்படும். இது தயாரிக்கப்படும்போது, இந்தக் கேக் உடைந்துவிட்டால் அதை அபசகுனம் என ஸ்கொட்லாந்து மக்கள் கருதிவருகின்றனர்.

### அயர்லாந்து

ஐரிஸ் மக்கள் - பாலன் இயேசுவை வரவேற்க, தமது வீடுகளிலுள்ள எல்லாக் கதவு, ஜன்னல்களிலும், எரியும் மெழுகுவர்த்திகளை ஏற்றிவைப்பர். அயர்லாந்தில் நத்தார் பண்டிகைக்காக நீண்டவிடுமுறை விடப்படும்.

### பின்லாந்து

பின்லாந்து மக்கள் சற்று வித்தியாசமான முறையில் நத்தார் தினத்தன்று - ஒறஸ் (**OATS**) தானியத்தில் செய்தகஞ்சியை அனைவரும் அருந்தி மகிழ்வர்.

**- சி.என். ஹெய்ன்ஸ்.**

## இயேசு பிறக்கவேண்டும்

ஓ. மனிதர்களே ......!
உங்கள் மனவயல்களிலிருந்து
அகந்தைக் களைகளை
அடியோடு களையவேண்டும்
என்பதற்காகவே
இறைமகனாம் இயேசு அன்று
தாழ்மைக் கோலமாய்த்
தச்சனின் மகனாய்த்
தரணியில் பிறந்தார்! - ஆனால்
உங்கள் மனக்குடில்களில்
அவர்
அவதரிப்பது என்றோ?!

பாவச் சிவப்பினைப்
பனிநிறம் ஆக்கிடப்
பிறந்திட்ட
பரமனின் மைந்தனுக்கு - அன்று
சத்திரத்தில் இடமில்லை!
இன்று உங்கள்
மனச் சத்திரத்திலாவது
இடமுண்டா?!

'மனங்களைத் திருப்புங்கள்' என்று
மனிதரைக் கேட்டவர்
மழலையாய்ப் பிறந்து - அன்னை
மரியின் மடிதனில்
காட்சி தந்தவர் - புவிக்கு
மறுபடி திரும்புமுன்
மனங்களைத் திருப்பிட
மனிதரே உமக்கு
மனமில்லையா...?!
மாசு நீங்கிட
யேசு செய்தவை
பயனின்றிப்
போயினவா...?
சோப்பு கடைகளில்
அழுக்கு உடைகளில்
என்ற நிலைதானா - இது
என்றும் நிலைதானா?!
ஆதியும் அந்தமும்
இல்லா இறைவனின் - இனிய
ஏகமகன்
பாவச் சேறாம்
பார்தனில்
பாலனாய் மார்கழியில்
மட்டும் தானா?!
பாவச் சுவரினைப்
பண்புடன் தகர்த்து
இறைவனும் மனிதனும்
இருகரம் இணைந்திட
நாளுமே நம்மிடை யேசு
நாதர் பிறந்திட
வேண்டுமன்றோ!!

**- ரஞ்சன் செல்வகுமார்.**

## மானிட வாழ்வினை மீட்டிடும் மனிதன்

மானிடர் வாழ்வினை மீட்டிட மனுவான மன்னனே
மேதினி போற்றி வணங்கிடும் மேரியின் மகனே
காசினியில் நாம்படும் துன்பங்களை நீக்கிடவே
காவலனாய் வந்துதித்த பொக்கிஷமே.

பெத்தலையென்ற ஊரினிலே பிறந்தவரே பெருமையுடன்
உம்புகழை பாரினில் கூறிடுவோம்
இத்தரையில் இனிய நல் வரங்களினால் எமை நிரப்பும்
இறைவன் உந்தன்பாதம் இன்பமுடன் சரணடைவோம்.

கந்தை துணியிலே மந்தைகள் மத்தியிலே
தந்தையாய் எமக்கு உருவான உதயமே
விந்தையாக உம்பிறப்பின் இரகசியம் - எம்
சிந்தையில் நிறைந்தெம்மை மேய்ப்பானாய் வழிநடத்துவீர்.

வாழ்வுதரும் தெய்வமே வரமருளும் வள்ளலே
ஏழ்மையில் உருவான ஏந்தலே அமைதிதரும் அன்பரே
மலரும் இப் புத்தாண்டதில் நாமெலாம் இணைந்து
மன மகிழ்வுடன் இறை அன்பில் நிலைத்திடுவோம்.

- அஜித் -

## இயேசு கிறிஸ்துவின் பிறப்பு உள்ளங்களை ஒளிர்விப்பதாக

கடவுள் மனிதகுலம்மீது கொண்ட அன்பினால், தமது மீட்புத்திட்டத்திற்கு ஏற்ப தம் ஒரேபேறான மகனை - பெண்ணின் வயிற்றிலிருந்து மனித உருவெடுத்து பிறக்கவைத்தார் என்பது யாவரும் அறிந்த உண்மை.

"இருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழல்படும் நாட்டில் உள்ளோர்க்கு ஒளி உதித்து சுடர்வீசிற்று" (எசா 9:12) என்ற இறைவாக்கு நிறைவேறியது. மாபரன் இயேசு இவ்வுலகில் பிறந்தார். இந்தப் பிறப்பையே கிறிஸ்துபிறப்பு விழாவாகக் கொண்டாடி வருகின்றோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆண்டுதோறும் இயேசு பிறப்பை விழாவாகக் கொண்டாடி மகிழ்கின்றோம். இயேசு பாலகன் பிறப்பதற்கு மாடமாளிகையோ, பஞ்சுமொத்தையோ தனக்காகத் தெரிந்தெடுக்கவில்லை. மாறாக மாட்டுத் தொழுவத்தையே தன் பிறப்பிற்காகத் தெரிந்தெடுத்தார்.

லூக்கா நற்செய்தியில் கூறப்பட்டதுபோல், "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோர் விடுதலைபெறவும், ஆண்டவரின் வருகையை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18-19) நசரேத்தூர் செபக்கூடத்தில் இயேசு கூறி, தன்பணியை ஆரம்பித்தார். அவர் வார்த்தையால் மட்டுமல்ல, வாழ்வாலும் வாழ்ந்து காட்டினார்.

பாமரர்களையும், பாவிகளையும், எளியோரையும், வறியோரையும், அகதிகளையும், அநாதைகளையும் தேடிச்சென்று அன்பையும், பாசத்தையும் அவர்கள்மீது பொழிந்தார்.

ஆம் - இன்று இயேசு பிறப்பிற்காக, வகைவகையான பலகாரவகைகளும், பலவர்ண ஆடைத்தெரிவுகளையும் மற்றும் வானவேடிக்கை, களியாட்ட நிகழ்வுகளையும் செய்கின்றீர்கள்.

மற்றவர்கள் என்ன ஆடைகள் போடுகிறார்கள். என்ன பலகாரங்கள் சுடுகிறார்கள். அவர்களைவிட நான் - நாங்கள் வித்தியாசமாகச் செய்ய வேண்டும், வீடுகளை அலங்காரம் செய்யவேண்டும் என்று போட்டா போட்டிபோட்டு, கிறிஸ்து பிறப்பு விழாவை ஒரு களியாட்டமாக, பார்வைக்குரியதாக, செய்ய நினைக்கும் உள்ளங்கள் பல.

ஆனால், இயேசு பிறப்பு விழாவனறு, தம் உணவிற்காக ஏங்கும் உள்ளங்கள் பல. அவர்களுக்கு உதவும் கரங்கள் இன்று எத்தனை, உங்கள் உள்ளங்களில் உள்ள பொறாமை, கோபம், வஞ்சகம் எனபவற்றைச் சுமந்து கொண்டு, இயேசு பிறப்பைக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை. நம் உள்ளங்களில் இயேசு பிறக்கவேண்டும். அதுதான் உண்மையான இயேசு பிறப்பாகும்.

நாம் அயலவர்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் மாறும்போது நம் உள்ளங்களில் இயேசு பிறப்பார். எப்போது நாம் வெளி ஆடம்பரங்களையும், பகட்டான வாழ்வையும் புறந்தள்ளிவிட்டு, ஆன்மீகரீதியான ஆயத்தங்களை மேற்கொள்கிறோமோ - மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கின்றோமோ அப்போதுதான், இயேசு கிறிஸ்து எம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பிறப்பார்.

அன்பு நெஞ்சங்களே இந்த உலகில் நாம் வாழ்வது நிரந்தரமற்ற, பொய்யான மாயையான வாழ்வு. நிலையான மறுவுலக வாழ்விற்காக நம் ஆன்மீக வாழ்வைப் புதுப்பித்து, இயேசு பிறப்பின் மகிமையை என்றும் அனுபவித்து, உணர்ந்து மகிழ்வடைவோம்.

இயேசு பிறப்பு அனைத்து உள்ளங்களையும் ஒளிர்விப்பதாக.

~ செ. செல்வதி ~

# விமானங்கள் மூலம் அமெரிக்காவை அல்கொய்டா அமைப்பு தாக்க முயற்சியாம்

## புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை



சரக்கு விமானங்களை "அல் கொய்டா" அமைப்பினர் அமெரிக்காவின் முக்கிய நகரங்களின் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு பாவிக்கலாமென - புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

எரிசக்தி நிலையங்கள், அணைக்கட்டுகள், எண்ணை உற்பத்திநிலையங்களை தமது தாக்குதலுக்கான முக்கிய இடங்களாக தெரிவுசெய்யலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், விமான ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளதாகவும், சரக்கு விமான கம்பனிகளுக்கு புதிய பாதுகாப்பு நடைமுறைகளை அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

மேலும், சரக்கு விமானங்களை "அல் கொய்டா" அமைப்பினர் பாவிக்கக்கூடிய சாத்தியங்கள் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்க காங்கிரஸில் விமானிகள் தொடர்பான மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

# கொலம்பிய பஸ்குண்டு வெடிப்பில் நான்கு பிரயாணிகள் உயிரிழப்பு

கொலம்பியாவின் வடமேற்கு பகுதியான "அன்ரியோகுயா" என்ற மாகாணத்தில் இடம்பெற்ற பஸ்குண்டு வெடிப்பில் நான்கு பிரயாணிகள் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவத்தில் வெடித்த குண்டு பஸ்சிற்குள் வைக்கப்பட்டிருந்ததா அல்லது பாதையில் வைக்கப்பட்டிருந்ததா என்பதை அறிவதற்கு பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

இதனிடையே, இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பாக இடதுசாரி புரட்சிகர படையணிமீது கொலம்பிய பொலிஸ் கட்டளை அதிகாரி குற்றம்சாட்டியுள்ளார்.

கொலம்பிய நகரங்களில் அண்மைக்காலத்தில் நடத்தப்பட்டுவரும் வன்முறைச் சம்பவங்களுக்கு இந்த அமைப்பே காரணம் என தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 6 பொதுமக்கள் கொலம்பியத் தலைநகரின் தென்பகுதியில் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தலிபான் போராளிகளால் கடத்தப்பட்ட இரு பொறியியலாளர்களும் விடுதலை

ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கு பகுதியான சபூல் மாகாணத்தில் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இரு இந்தியப் பொறியியலாளர்கள் டிசம்பர் 6 ஆம் திகதி தலிபான் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்கள். இவ்விரு இந்திய பொறியியலாளர்களும் விடுவிக்கப்பட்டுள்ளதாக ஆப்கானிஸ்தான் வெளிநாட்டமைச்சின் பேச்சாளர் "ஓமர் சமட்" ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்துள்ளார். விடுவிக்கப்பட்ட இவர்கள் காபூலில் அமைந்துள்ள இந்தியத் தூதுவராலயத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் வீதி அமைப்புப் பணியில் ஈடுபட்டுவரும் அமெரிக்க ஒப்பந்தகாரரான "லூயிஸ் பேகர்" இந்தியத் தொழிலாளர்களை வீதி அமைக்கும் பணிக்கு அமர்த்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.




# நெடுமாறன் விடுதலையில் நெருக்கடி நீதிபதி ஆனந்தன் திடீர் இடமாற்றம்

## தமிழக அரசு அதிரடி நடவடிக்கை

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் பிணையில் விடுதலையாவதில் புதிய சிக்கல் எழுந்துள்ளது. அவரது பிணைமனு மீது நேற்று தீர்ப்பளிக்க இருந்த நீதிபதி திடீரென மாற்றப்பட்டுவிட்டார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாக கூறி நெடுமாறன் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கடந்த 15 மாதமாக அவர் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் பொடா வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் நெடுமாறனுக்கு பிணை வழங்கியது. ஆனால், திண்டுக்கல் மற்றும் ஆலந்தூர் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் நெடுமாறன் விடுவிக்கப்படவில்லை.

இதைத் தொடர்ந்து இரு நீதிமன்றங்களிலும் பிணைகோரி நெடுமாறன் சார்பில் மனுக்கள் தாக்கலாயின.

இதில் திண்டுக்கல் நீதிமன்றத்தில் பிணை கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், ஆலந்தூர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணை முடிவடைந்தது. நேற்று தீர்ப்பு வழங்குவதாக நீதிபதி ஆனந்தன் அறிவித்திருந்தார்.

அதன்படி நேற்று காலை நெடுமாறனின் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

ஆனால், நீதிபதி ஆனந்தன் வரவில்லை. நீதிபதி ஆனந்தன் கூடுதல் மாஜிஸ்திரேட்டாக 48 நாள் பயிற்சியில் வந்தவர் என்றும் ஆனால், பயிற்சிக்காலம் முடிவடைவதற்குள் அவர் இடம்மாற்றப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால், இந்த பிணை தொடர்பாக பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தையே மீண்டும் அணுகுமாறும் நெடுமாறன் தரப்பு வழக்கறிஞர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதனால், நெடுமாறன் சிறையிலிருந்து வெளியே வருவதில் புதிய சிக்கல் ஏற்பட்டுளளது. ஏற்கனவே பொடாநீதிமன்றத்தில் நெடுமாறனின் பிணைமனு நிராகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் புதிதாக அவர் பிணைமனு தாக்கல் செய்யவேண்டுமா அல்லது பழைய மனுவின் அடிப்படையில் மீண்டும் விசாரணை நடக்குமா என்பதிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

# கலிபோர்னிய பூமியதிர்ச்சியை அடுத்து அவசரகால நிலை அங்கு பிரகடனம்

கலிபோர்னிய மாநிலத்தை பலமான பூமி அதிர்ச்சியொன்று அண்மையில் தாக்கியிருந்தது. இதனால், அம்மாநிலத்தில் அவசரகால சட்டத்தை அம்மாநிலத்தின் கவர்னர் ஆர்னோல்ட் ஸ்வாஸ்நேகர் பிரகடனப்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கு கட்டுமானப்பணிகளுக்கு அமமாநிலத்தின் வழங்களைப் பாவிப்பதற்கு இதன் மூலம் வழி அமைக்கப்பட்டுள்ளது.





இந்தப் பூமி அதிர்ச்சியின்போது இரண்டு பெண்கள் மரணமடைந்ததாகவும், 50ற்கு மேற்பட்டவாகள் காயமடைந்ததாகவும் கவர்னரும் முன்னாள் நடிகருமான "ஸ்வாஸ்நேகர்" தெரிவித்தார். உலகின் பூமி அதிர்ச்சியின் தாக்குதலுக்குட்படக்கூடிய பிரதேசங்களில் "கலிபோர்னியா" குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

1994ம்ஆண்டு கலிபோர்னியாவில் நடைபெற்ற பூமி அதிர்ச்சியில் 57 பேர்வரை மரணமடைந்தும் 1500 பேர் வரையிலானோர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவிலுள்ள பசுக்களிலும் முதன்முறையாக விசர்நோய்

பசுக்களின் மூளையில் தொற்றிக்கொள்ளும் விசர்நோய் முதன்முறையாக அமெரிக்காவிலும் பரவியுள்ளதாக அந்த நாட்டின் விவசாய அமைச்சர் "ஆன் வெனெமன்" தெரிவித்தார். ஆயினும், அமெரிக்காவின் மாட்டிறைச்சி பாவனைக்கு ஏற்றது எனவும் தெரிவித்தார்.

இதன் விளைவாக அமெரிக்க மாட்டிறைச்சியை இறக்குமதி செய்யும் ஆசிய நாடுகளில் குறிப்பாக ஜப்பான், இறக்குமதியை தடை செய்துள்ளது.



மேலும், இந்த நோய் பாதிக்கப்பட்ட மாட்டிறைச்சியை உண்பவர்களின் மூளையும் பாதிப்படைகின்றது.

இதனிடையே, இந்த நோயால் பாதிக்கப்பட்ட மாட்டின், பாதிக்கப்பட்ட மூளைப் பகுதியை மேலும் பரிசோதனைக்காக இராணுவ விமான மூலம் இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த நோய் 1986 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் மாடுகளின் மூளையைப் பாதிப்படையச் செய்யும் என்ற உண்மை, பரிசோதனை மூலம் கண்டு பிடிக்கப்பட்டது. இதன்பின் 1,78,000 மாடுகளை இந்த நோய் தாக்கியிருப்பதையும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. வுடனான கூட்டணி; திரிசங்கு நிலையில் ம.தி.மு.க.!

பாரதீய ஜனதாக் கட்சியுடனான கூட்டணியைத் தொடர்வதா, இல்லையா என்பது குறித்து முடிவெடுப்பதை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ம.தி.மு.க. ஒத்திவைத்துவிட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகுவதாகவும், இனிப் பிரச்சினைகளின் அடிப்படையில் மட்டுமே ஆதரவளிக்கப்படும் எனவும், கடந்த 20 ஆம் திகதி தி.மு.க. அறிவித்தது. இதனையடுத்து மத்திய அமைச்சரவையிலிருந்த தி.மு.க. அமைச்சர்கள் ராஜினாமாச் செய்தனர்.

இந்த நிலையில் கூட்டணி குறித்த தனது நிலைப்பாட்டை அறிவிப்பதில் ம.தி.மு.க தடுமாறி வருகிறது. முதலில் இது தொடர்பான கட்சியின் முடிவு திங்கட்கிழமை வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், அன்று வைகோவைச் சிறையில் சந்தித்துவிட்டுத் திரும்பிய மத்திய அமைச்சர்கள் செஞ்சி ராமச்சந்திரன், கண்ணப்பன் ஆகியோர் நேற்று முடிவு அறிவிக்கப்படும் என அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த மூன்று நாட்களாக வேலூர் சிறையில் தன்னைச் சந்திக்கவரும் கட்சிப் பிரமுகர்களுடனும் இது குறித்து வைகோ விவாதித்து வந்தார்.

நேற்று ம.தி.மு.க. அவைத் தலைவர் கணேசன், மத்திய அமைச்சர்கள் செஞ்சி ராமச்சந்திரன், கண்ணப்பன் ஆகியோர் வேலூர் சிறையில் வைகோவைச் சந்தித்து விவாதித்தனர். இந்தச் சந்திப்புக்கு பின்னர் சென்னையில் ம.தி.மு.க. உயர்மட்டக் குழுக்கூட்டம் நடப்பதாக இருந்தது.

ஆனால், வைகோவைச் சிறையில் சந்தித்துவிட்டு வெளியே வந்த எல். கணேசன் சிறைவாசலில் வைத்து செய்தியாளர்களிடம் பேசுகையில், சென்னையில் 29 ஆம் திகதி கட்சியின் மாவட்டச் செயலாளர்களின் கூட்டத்தை நடத்தி, இது குறித்து விவாதிக்கப்படும். கூட்டணியில் நீடிப்பதா, வேண்டாமா என்பது தொடர்பாக அன்று முடிவு வெளியிடப்படும் என்றார்.

இதேவேளை, பா.ஜ.க. கூட்டணியில் தொடர்வதா, இல்லையா என்பது குறித்து இன்று பா.ம.க. தனது முடிவை அறிவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஹ்ரெய்னிலுள்ள அமெரிக்க நிறுவனங்களில் தாக்குதல்கள் நடத்தப்படலாமென அச்சம்

பஹ்ரெய்னில் அமைந்துள்ள அமெரிக்காவிற்கு சொந்தமான நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் நடக்கலாமென அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.





வளைகுடா நாடுகளுக்கு அமெரிக்காவில் இருந்து செல்லும் அந்த நாட்டுப் பிரஜைகளை பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளது.

அமெரிக்க நகரங்களின் பாதுகாப்பை அதிகரித்தபின்பு, மேற்படி பஹ்ரெயின் தொடர்பான "அல் கொய்டா" அச்சுறுத்தலைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நட்பு நாடாக பஹ்ரெய்ன் செயற்பட்டுவருகின்றது. மேலும், அமெரிக்க கடற்படையில் 5 ஆவது கப்பல் படையின் தளமாகவும் பஹ்ரெயின் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எம்.ஜி.ஆரின் நினைவு நாள் நேற்றைய தினம் அனுஷ்டிப்பு!

முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப் பகுதியெங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

யாழ்.குடாநாட்டில் இயங்கும் எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகம், எம்.ஜி.ஆர். நற்பணி மன்றம் ஆகியன நேற்று எம்.ஜி.ஆரின் நினைவு நாளை அனுஷ்டித்தனர்.

இதேவேளை - எம்.ஜி.ஆர். நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ எம்.ஜி.ஆர். முன்னேற்றச் சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவுக்கூட்டமும் சைக்கிளோட்டப் போட்டி ஒன்றும் நாளை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விஸ்வமடு பொதுச்சந்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற எம்.ஜி. ஆர் நினைவுநாள் நிகழ்வில், எம்.ஜி. ஆரின் திருவுருப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றி, நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

வவுனியா கூட்டுறவுச் சங்கத்தின் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற எம்.ஜி.ஆர். நினைவு நிகழ்வில், வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் தமிழ்மணி, எஸ்.எம்.ஜி.நாதன், தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் எழிலன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு சிறப்புரையாற்றிய வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், தமிழீழ போராட்டத்தின் ஆரம்பகட்டத் தேவைகளை உணர்ந்து உதவியவர் எம்.ஜி.ஆர் எனத் தெரிவித்தார்.

## நாற்சந்தி

'வணக்கம் மணியண்ணை... நத்தார் வாழ்த்துக்கள்' என்றார் டேவிட் வாத்தியார்...

'வணக்கம்... வணக்கம்... உங்களுக்கும் எனது வாழ்த்துக்கள்' என்றார் மணியத்தார். ஏற்கனவே சந்தியில் சுருட்டுப்புகைத்துக்கொண்டிருந்த கனகரைக் கண்டதும்... 'என்ன கனகண்ணை...' கடும்யோசனையிலை இருக்கிறீங்க...? -என்றார்.

'என்னத்தை யோசனை... போனமுறைக்கு முதல்முறை நத்தாருக்குத்தான் புலிகள் போர்நிறுத்தத்தை அறிவிச்சவை... இப்ப இரண்டுவருஷம் ஒரு மாதிரி நிம்மதியாய்ப் போட்டுது... அடுத்த வருஷம் நத்தாருக்கு இப்படி இருப்போமோ தெரியல்லை...'

'ஏன் அப்படியோசிக்கிறியள்... சண்டை தொடங்கிடுமோ எண்டு பயமா இருக்கே...'

'பின்னை என்ன...? சமாதானம் நிண்டுபோச்சு... பேச்சுவார்த்தை தொடங்குமாப்போலை இல்லை... ரணில் போட்டிருக்கிற காச்சட்டை மேல் சட்டையைக் கூட சந்திரிகா போறபோக்கிலை பறிச்சுப்போட்டு... வர்த்தமானியலை அறிவிப்பா போலை கிடக்கு... ஆயுதங்களை வாங்கிக்குவிக்கிறதிலை அம்மணி காட்டுற ஆர்வம் பயமாயெல்லே இருக்கு...'

'நீ... யொன்று... ஆயுதத்தை வாங்கிக் குவிக்கலாம்... ஆமிக்கு ஆக்களைச் சேர்க்கமுடியுமே... ஏற்கனவே அரைவாசிப் பேரைக் காணேலை ஓடிப்போட்டினம்... இப்ப ஆயுதம் வாங்கிற சேதியைக் கேட்டா மிச்சப்பேருமெல்லே ஓடப்போகினம்...'

'உனக்கெல்லாம் பகிடிதான்... எனக்கென்னமோ அம்மணிசண்டைக்கு தயாராகின்றா போலத்தான் கிடக்கு...'

'சமாதானத்தை சந்திரிகா விரும்பாவிட்டாலும் சர்வதேசமுமெல்லே விரும்புது... அதுதானே அவவுக்கு பிரச்சினை...' என்றார் இடையில் குறுக்கிட்ட டேவிட் வாத்தியார்.

'முதலிலை ரணிலுக்கும் சந்திரிக்காவிற்குமான சண்டை முடியட்டும் அதுக்குப் பிறகுதான் மற்றச் சண்டையோ... சமாதானமோ தொடங்கும்...' என்றார் மணியம்.

'தங்களட சண்டையையும் சமாதானத்துக்கான யுத்தம் என்று சொன்னாலும் சொல்லுவா அம்மணி...' என்றார் கனகர்...

தெருவாசி

# 308 பிரதேச செயலர்களும் ஒருவாரகால சேவை விலகல்

(கொழும்பு)

308 பிரதேச செயலர் பிரிவுகளை சேர்ந்த பிரதேச செயலர்கள் நேற்றிலிருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தமது சேவையிலிருந்து விலகியுள்ளனர்.

சிங்கள இனத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் ஒருவர் ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தாக்கப்பட்டதற்கு ஐ.தே கட்சியினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததைக் கண்டித்தே இவர்கள் தமது சேவையிலிருந்து விலகியுள்ளனர்.

ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வந்ததாகவும் தாங்கள் சேவையிலிருந்தது விலகியிருக்கும் ஒருவார காலத்திலும் இதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதுவிட்டால் 31ஆம் திகதிக்கு பின்னர் மாற்று வழியில் தாங்கள் போராடவுள்ளதாகவும். இது குறித்து 31 ஆம் திகதியன்று தாங்கள் கூடி ஆராய இருப்பதாகவும் சேவையிலிருந்து விலகியுள்ள பிரதேச செயலர்கள் தெரிவித்துள்ளனர்.

அரச ஊழியர்கள் மீது இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது அடிப்படை மனித உரிமை மீறல்கள் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை பிரதேச செயலர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக மூன்று பேர் அடங்கிய விசாரணைக் குழுவென்றைபிரதமர் நியமித்துள்ளார்.

# வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு யாழ். நீதிமன்றம் தடையுத்தரவு!

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள வாகன சுத்திகரிப்பு நிலையமொன்றிற்கு யாழ். நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் குடியிருக்கும் ஒருவரால் நீதிமன்றத்தில் செய்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றில் எடுக்கப்பட்டபோதே, இந்தத் தடையுத்தரவை நீதிபதி இ.த.விக்கினராசா பிறப்பித்தார்.

சூழல் மாசடையும் விதத்தில் இந்த சுத்திகரிப்பு நிலையம் செயற்படுவதாகவும், அதனால் அருகிலுள்ள குடியிருப்பாளர்களின் உடல் நலத்திற்கு தீங்கு ஏற்பட்டு வருவதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பாக முன்னர் வலி.தென்மேற்கு பிரதேச சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு முறையிட்ட போதும் எதுவித சாதகமான முடிவுகளும் எட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையிலே இந்தச் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருவதாக விசாரணைகளின் மூலம் அறிந்துகொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு, சுத்திகரிப்பு நிலையத்தின் அனுமதியை ரத்துச் செய்யும்படி வலி.தென்மேற்கு பிரதேச சபையை கேட்டிருந்தனர் ஆனால், அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இதனையடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கையடுத்தே நீதிமன்றம் இந்தச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இடைக்கால தடையுத்தரவை வழங்கியிருக்கிறது. குடாநாட்டின் ஏனைய பாகங்களில் இயங்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் அனைத்தும் சன நெருக்கடி குறைந்த இடங்களிலேயே அமைந்திருப்பதை கவனத்திற்கொண்டே, இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக நீதிபதி இ.த.விக்கினராசா தெரிவித்தார். (ச)

## எயிட்ஸ் தடுப்பு...

அருண் மாஸ்டரும், தீவகப் பகுதிக்கான பிரசார நடவடிக்கைகளுக்கு தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தனும் பொறுப்பாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகள் ஒருபோதும்....

ஆனால், இந்திய மீனவர்கள் முல்லைத்தீவு, கச்சதீவுப் பகுதிகளில் வைத்தே கைதுசெய்யப்பட்டனர். இவர்களை இராணுவ உளவாளிகள் எனக் கருதியே புலிகள் கைதுசெய்திருந்தனர்.

இந்தக் கைது தொடர்பாக கைதான மீனவர்களுடன் சென்ற மற்ற மீனவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே நாம் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டோம். இலங்கை அரசாங்கம் இருக்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய மீனவர்களைக் கைது செய்வதென்பது எந்த வகையில் பொருத்தம் என்பது எனக்குத் தெரியவில்லை.

எனினும் இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப்புலிகள், இந்திய அரசு எனும் முத்தரப்புகளும் ஒன்று சேர்ந்தே மீனவர்களை விடுவித்திருந்தோம்.

இந்த விடயத்தை இலங்கை அரசிடமே கையளித்திருந்தோம். ஏனெனில் இந்தப் பிரச்சினை பெரிதுபட்டுவிடக்கூடாது எனக் கருதினோம்.

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான சமரச முயற்சிகளில் இந்திய, இலங்கை அரசாங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டு எல்லையூடாகத் தமது பயணத்தினை மேற்கொள்ளாத வகையில் கரையோரக் காவல் நடவடிக்கைகள் திருத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொமடோர் சிற்றணாவிஸ் தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிஸா, மேற்குவங்காளம் ஆகிய நான்கு மாநிலக் கடற்பிரதேசத்தை உள்ளடக்கிய கிழக்குக் கடற்பகுதிக்கான தளபதியாக பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

# கொள்ளைச்சம்பவத்தின் சந்தேகநபர் வவுனியா பொலிஸாரினால் கைது!

(வவுனியா)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை வவுனியாப் பொலிஸார் கைது செய்திருப்பதாக தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக வவுனியாவின் நகரப்பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பல்வேறு களவுச் சம்பவங்களுடனும் தொடர்புடைய இவரை வவுனியாப் பொலிஸார் தேடிவந்தனர்.

எனினும் இவர் நேற்று பொலிஸாரின் விசேட நடவடிக்கை மூலம் கைது செய்யப்பட்டார். இவரின் வாக்கு மூலத்தைக் கொண்டு மேலும் பலர் கைதுசெய்யப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் 17 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 6 சைக்கிள்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆயப்பகுதியின் சுமைப்பிரிவு இரு தினங்கள் மூடப்படும்!

(கிளிநொச்சி)

தமிழீழ நிதித்துறையின் ஆயப்பகுதிக்கான சுமை 1 பிரிவு இந்த ஆண்டுக்கான இறுதிப் பணிகளையும், அடுத்த ஆண்டுக்கான ஆரம்பக்கட்ட வேலைத்திட்டங்களையும் மேற்கொள்வதற்காக எதிர்வரும் 30, 31 ஆம் நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

இருப்பினும் நாளாந்தம் பழுதடையக்கூடிய முட்டை, ஐஸ்கட்டி, மரக்கறி என்பவற்றுடன் நாளேடுகள் என்பவற்றை கொண்டு வருவதற்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை - பயணிகள் போக்குவரத்து வழமைபோன்று இடம் பெறுமென்று தமிழீழ நிதித்துறையின் ஆயப்பகுதி அறிவித்துள்ளது.

# கண்ணிவெடி அகற்றல் குறித்து மன்னார் கச்சேரியில் விளக்கம்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமொன்று நேற்று மன்னார் மாவட்ட அரச செயலகத்தில் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் யு.என்.டி.பி. பிரதிநிதி லியோனி, எப்.எஸ்.ரி. அமைப்பைச் சேர்ந்த பாலகுமார், கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த இ.ஏட்வேட், மன்னார்மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த மரியதாஸ் குரூஸ் ஆகியோரும் தலைமன்னார் பகுதி கடற்படை அதிகாரியும், மன்னார் நகர பொலிஸ் அதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால், மன்னார் மாவட்டத்தில் இதுவரை 77662 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், இந்தப் பகுதிக்குள் 2257 கண்ணிவெடிகளும், 1648 வெடிக்காத எறிகணைகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (201)

## முகமாலை...

மன்னார் உயிலங்குளம் இராணுவச் சோதனைச்சாவடிகள் திறந்திருந்தமையால் வவுனியா, மன்னார் வன்னிக்கிடையேயான போக்குவரத்துக்கள் குறிப்பிட்ட நேரம்வரை இடம் பெற்றன.

எனினும் முகமாலை இராணுவச் சோதனைச்சாவடி வழமையான நேரத்துடன் மூடப்பட்டமையால் இப்பாதையூடாக தமது பயணத்தை மேற்கொண்ட மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

## அரச அதிகாரி...

மக்களுடைய நெருக்கடிகள் குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக இராணுவத் தளபதி சுசில் சந்திரபால உறுதியளித்தார்.

ஒரு மணிநேரமாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் பத்திரிகையாளர்களிடம் தனிப்பட்ட ரீதியில் பேசிய சுசில் சந்திரபால, பத்திரிகைகள் மிகைப்படுத்தாமற் செய்திகளை வெளியிடவேண்டுமெனவும், முரண்பாடுகளைத் தவிர்ப்பதிலே முக்கிய பங்காற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

# தேரரின் இறப்பிற்கான காரணத்தை ரஷ்ய அரசு விசாரிக்க வேண்டும்!

## அமரபுர பீடாதிபதி கோரிக்கை

கங்கொடவில சோமதேரோ இறப்பதற்கான உண்மையான காரணம் என்ன என்பதனை ரஷ்ய அரசாங்கம் பூரண விசாரணை நடத்தவேண்டுமென அமரபுர நிக்காயவின் பீடாதிபதி வண.கொட்டுகொட தம்மவாச தேரோ கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்தின் மூலம் இந்தக் கடிதத்தினை அவர் அனுப்பியுள்ளார்.

ரஷ்யாவிற்கு சென்றிருந்த வேளை, சென்.பீற்றர்ஸ்பேக் நகரில் எதிர்பாராத விதமாக சோமதேரோ காலமானார். இவரது மரணவிசாரணையின் வைத்திய அறிக்கைப்படி இவர் மாரடைப்பு காரணமாகவே இறந்துள்ளார்.

இவரது இந்த இறப்பில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாகவே பூரண விசாரணைகள் நடத்துமாறு கொட்டுகொட தம்மவாசதேரோ கேட்டுள்ளார்.

பிரசன்னா கிறபிக்ஸ்
கே.கே.எஸ். றோட், சுன்னாகம்
எமது நிறுவனத்தில் குறைந்த கட்டணத்தில் உங்கள் எதிர்பார்ப்பின்படி பின்வரும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- தவணைக்கட்டணத்தில் நவீன கணனிகள்
- றோனியோ வேலைகள்
- Printing (Lazer, Dotmatic and Colour)
- Photo Scanning and Photo Mixing
- CD Writting (MP3, Audio and Video)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.